உ

சிவமயம்

கண்டனூர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் வரலாறு



" அண்ணார்ந்த கோபுரமாம் அற்புதமாம் மண்டபமாம்
கண்ணான நகரத்தார் கண்டனூர்ச் சிவன்கோயில்"

கண்டனூர் நகரத்தார் வெளியீடு

ஆக்கியோன் :
பா. தியாகராசன், எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்.,

உ

சிவமயம்

கண்டனூர்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் வரலாறு

ஆக்கியோன் :

பா. தியாகராசன், எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்.,
தமிழாசிரியர், நகரத்தார் மேனிலைப்பள்ளி
தேவகோட்டை

வெளியீடு

கண்டனூர் நகரத்தார்


முதற்பதிப்பு : மே - 2000

அச்சிட்டோர் :
ஏஷியன் அச்சகம், சென்னை - 600 014.



அருள்மிகு சுந்தரேசப் பெருமான்

நீறுதவழ் நெற்றி நிலவுதவழ் பொட்டழகு
ஏறுதிமில் காளை இடுப்பின்கீழ் - தாருகமழ்
தோள்கள்மேல் நாகமணி சுந்தரேசர் தாள்பணிவோம்
நாளும் வளாக நலம்.



அருள்தரு மீனாட்சி அம்மன்

வானாரும் சோதி வளர்கருணைக் கண்ணிரண்டு
தேனாடும் மாலைதவழ் செம்பட்டு - கூனாரும்
மின்னல் இடையாளாம் மீனாட்சி தாள்பணிவோம்
இன்னல் நமக்கினிமேல் ஏது?

32/2

உ
சிவமயம்

முன்னுரை

"உலகெ லாம்உணர்ந்த தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்"

எல்லாக் காலத்தும் எல்லாமுமாகவும், எங்கும் நிறைந்திருக்கின்றவனுமாகிய, முழுமுதற்பொருளான சிவபெருமானை வணங்கி முன்னுரையை எழுதுகிறேன்.

என்னை ஆசிரியப்பணியில் அமர்த்திய என் பள்ளிச் செயலர் உயர்திரு. அ. இராமநாதன்,எம்.ஏ. அவர்களுக்கும், உயர்திரு. மு.வீ. அருணாசலம் (செம்பொன்) அவர்களுக்கும், உயர்திரு. பேராசிரியர் எஸ்.பி. அருணாசலம், எம்.காம்.,எம்.ஃபில். (வணிகவியல் துறை, ஸ்ரீசேவுகன் அண்ணாமலைக் கல்லூரி) அவர்களுக்கும், என்னை ஆதரித்துப் போற்றும் என் பள்ளித் தலைமையாசிரியர் உயர்திரு. ஆ.கணேசன்,எம்.எஸ்ஸி., எம்.எட்., எம்.ஃபில். அவர்களுக்கும் என் பணிவு கலந்த நன்றியினைப் புலப்படுத்திக்கொள்கிறேன். என்னுடைய எம்.ஃபில். ஆய்விற்கு நெறியாளராய் இருந்து வழிகாட்டும் உயர்திரு. டாக்டர் சபா. அருணாசலம், எம்.ஏ., பிஎச்.டி. அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைப் புலப்படுத்துகிறேன்.

என் முதல் நூலான தேவகோட்டை **"ஸ்ரீமீனாட்சி உடனான ஸ்ரீ சுந்தரேஸ்வரர் திருக்கோயில் வரலாறும் வழிபாடும்"** என்ற நூலினை வெளிவர உதவிய தெய்வத்திரு. பட்டுசிவாச்சாரியார் அவர்களை நன்றியுடன் நினைத்துக்கொள்கிறேன். மேலும், என் முதல் நூல் படைப்பின் போது ஆக்கமும், ஊக்கமும் தந்துதவிய அழகப்பா பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் உயர்திரு. டாக்டர் தே. சொக்கலிங்கம், பிஎச்.டி. அவர்களுக்கும் அந்நூலினை

இலவசமாய் அச்சிட்டுதவிய, சென்னை, வசந்தா பிரசுரம் உயர்திரு. சித.சா.தெ. சாமிநாதன் அவர்களுக்கும் என் பணிவான நன்றியினைப் புலப்படுத்துகிறேன்.

கண்டனூர் அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயில் கண்டனூர் நகரத்தார்களின் நிருவாகத்தில் இயங்கி வருகிறது. இக்கோயில் அழகுக்கும், தூய்மைக்கும் பெயர் பெற்றது. இக்கோயிலின் தூய்மையைக் கண்டு அரசாங்கம் பரிசு - பட்டயங்கள் வழங்கிச் சிறப்பித்துள்ளது. இக்கோயிலின் வரலாற்றை இந்நூல் விரித்துக் கூறுகிறது. செட்டிநாட்டில் சீரும் சிறப்பும் உடைய இக்கோயிலின் வரலாற்றை எழுத எனக்குக் கிடைத்த வாய்ப்பினைப் பெரும் பேறாகக் கருதுகிறேன். இந்நூலை எழுத எனக்கு அனுமதியளித்த கண்டனூர் நகரத்தார் பெருமக்களுக்கும், இந்நூலிற்குத் தேவையான செய்திகளைத் தந்துதவிய அன்பர்கள் அனைவருக்கும், அணிந்துரை வழங்கிய டாக்டர் அரசி, பதிப்புரை எழுதிய திரு. குழந்தைக்கவிஞர் செல்ல கணபதி ஆகியோர்க்கும் எனது அன்பார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நூல் தொடர்பான செய்திகளைச் சேகரிக்க நான் கண்டனூர் வரும் போதெல்லாம் திரு.அரசி.முத்துக்குமார் இன்முகம் காட்டி ஒல்லும் வகையான் உதவினார். அவருக்கும் என் இனிய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை முழுமையும் வாசித்தளித்துத் தேவையான இடங்களில் திருத்தங்களைச் செய்து உதவிய கோயில் அறங்காவலர்கள் உயர்திரு. சி.ராம.சொ.சுப.சொ. பழனிமலைச் செட்டியார், உயர்திரு நா.அ.ராம.கா.ராம. நாச்சியப்பச் செட்டியார், உயர்திரு. நா.பழ.ராம.வயி. இராமநாதன் செட்டியார் ஆகியோருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமச்சிவாய வாழ்க!

1-1-2000
25, சுப்பிரமணியபுரம்,
தேவகோட்டை.
தொலைபேசி (04561)70640

பா. தியாகராசன்,
தமிழாசிரியர்,
ஸ்ரீநகரத்தார் மேனிலைப்பள்ளி,
தேவகோட்டை.

உ

சிவமயம்

அணிந்துரை

"வண்டளக்கும் கண்ணாய்! வளமளக்கும் மீனாட்சி!
தொண்டளக்கும் கையாரே! சுந்தரேசா! - கண்டனூரின்
நின்று வளர்ந்தோங்கு நேர்மையுடன் ஒற்றுமைக்கே
என்றைக்கும் காப்பாய் இரும்."

"கண்டனூர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் வரலாறு" என்னும் அழகிய நூலுக்கு அணிந்துரை எழுதுவதில் அளவிலா மகிழ்ச்சி அடைகிறேன். ஏனெனில், இந்நூலை எழுதியவர், என் மாணவர்; நூல், என் ஊரைப் பற்றியது. நூலை இயற்றிய மாணவர் திரு. பா. தியாகராசன், தேவகோட்டையைச் சேர்ந்தவர். தேவகோட்டை நகரத்தில் மேனிலைப் பள்ளியின் தமிழாசிரியர். அந்தப் பள்ளியின் முன்னாள் தமிழாசிரியரின் மைந்தர். ஓதுவார் பரம்பரையின் கால்முளை.

இந்நூல், கண்டனூர் வரலாறு, பெருமை, சிவன் கோவில் வரலாறு, அமைப்பு, சிறப்பு, நாள் வழிபாடு, விழாக்கள், நிருவாக முறை, தர்மங்கள் ஆகிய அனைத்தையும் எளிய இனிய தமிழில் கூறுகிறது. இந்நூலைப் படித்ததும் தன் மகனைச் சான்றோன் எனக் கேள்விப்பட்ட தாய், ஈன்ற பொழுதைவிட மகிழும் நிலையை அடைந்தேன்.

என்னிடம் இளங்கலைப் பட்டம் பெறும் தமிழையும், நான் பயின்ற அழகப்பா கல்லூரி முதுகலைத் தமிழையும், ஆசிரியப்

பயிற்சியையும் கற்றுத் தேர்ந்த தம்பி தியாகராாசன், வளரும் பயிர். அன்பு நிரம்பியவன். ஓயா உழைப்பாளி. மற்றவர்க்கு உதவ வழிபார்த்துக் காத்திருப்பவன். அவன் எழுதப்போகும் அளவில் அடங்கா நூல்களுக்கு, இந்நூல் நம்மூர்ச் சிவபெருமானும் மீனாட்சி அம்மனும் எடுத்துக் கொடுத்த முதல் நூல்.

ஊரின் ராசியாலும், அவன் உழைப்பின் தொடர்ச்சியாலும, மீனாட்சி சுந்தரேசுவரர் அருளாலும், இந்நூல் பல பதிப்புகள் வெளியாகவும், பல நூல்கட்கு வழிகாட்டவும், நூலாசிரியர் பல உயர்வுகளைப் பெறவும் மனமார வாழ்த்துகிறேன்.

106, மீனாட்சி அரங்கம்,
வ. உ. சி. தெரு,
கண்டனூர் - 630 104.
தொ.பே. 82360.

அன்பன்
டாக்டர் அர. சிங்காரவடிவேலன் (எ)
அரசி

பதிப்புரை

கடமை கண்ணியம் கட்டுப்பாடு ஆகியவற்றைப் பண்பாடாகக் கொள்ள வேண்டுமென அறிஞர் அண்ணா வலியுறுத்தினார். ஆனால், அதற்கு முன்பே அவற்றை வாழ்வின் கோட்பாடாகக் கொண்டு கண்ணியம் மிக்கவர்களாக, கடமை தவறாதவர்களாக, கட்டுப்பாடு கொண்டவர்களாகக் கண்டனூர் நகரத்தார் வாழ்ந்து வருகிறார்கள் என்பதே பெருமைக்குரிய செய்தி. கருத்து வேறுபாடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தபோதிலும் பொதுநன்மை என்று வருகிறபோது அதை நோக்கியே மிகுந்த கட்டுப்பாட்டுடன் செயல்படுகின்ற பாங்கினர், கண்டனூர் நகரத்தார்.

சமுதாயக் கட்டுப்பாட்டினைக் கடைப்பிடிப்பதில் கண்டனூர் நகரத்தார்க்கு இணை கண்டனூர் நகரத்தார்களே என்று மற்ற ஊர் நகரத்தார்கள் பாராட்டுகின்ற வகையில் கண்டனூர் நகரத்தாரின் செயல்பாடுகள் அமைந்துள்ளன. கண்டனூர் நகரத்தார் வழிபடும் கண்டனூர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருவுள்ளப்படிதான் அனைத்தும் இயங்குவதாகக் கண்டனூர் நகரத்தார் கருதி வாழ்கின்றனர். இத்தகைய சிறப்புடைய வழிபடும் தெய்வத்தின் வரலாற்றைப் பதிவு செய்வது அவசியம். இளைய தலைமுறையினரும் இனி வரும் தலைமுறையினரும் இந்த வரலாற்றைத் தெரிந்துகொள்ளுவதால் அவர்கள் வாழ்வும் பெருமைமிக்கதாக அமையும் என்பதில் ஐயமில்லை. அந்த நோக்கில் நுண்மாண் நுழைபுலத்தோடு கோயில் வரலாறுகள் எழுதுகின்ற தமிழாசிரியர் திரு. பா. தியாகராஜன், எம்.ஏ.,பி.எட்., எம்.ஃபில். அவர்களைக் கொண்டு

கண்டனூர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் வரலாற்றை எழுதச்செய்த கண்டனூர் நகரத்தார்களுக்கும், செம்மையாக நெறிப்படுத்திய பேராசிரியர் முனைவர் அர. சிங்காரவடிவேலன் அவர்கட்கும் வளரும் தலைமுறை சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மூதாதையர் வரலாறு அறியாமல் யாரும் பெருமை பெற்றுவிட முடியாது; பாட்டன் முப்பாட்டான் வரலாற்றை ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற வகையில் அமைந்த இந்த நூலின் நோக்கம் பாராட்டுக்குரியது.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

கண்டனூர்
2-4-2000

அன்புடன்,
செல்ல கணபதி.

கண்டனூர்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் வரலாறு

கண்ணுதலான் காட்சி தரும் கண்டனூர்

"நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!"

என்று, எல்லாம் வல்ல சிவபெருமானை வணங்கி ஏத்தும் பண்புடையோர், நகரத்தார் பெருமக்கள். அவர்கள் அஞ்செழுத்து மந்திரத்தை நெஞ்சில் அழுத்தியவர்கள். செட்டிநாட்டுப்பகுதி உள்ளிட்ட தமிழகத்தின் பிற பகுதிகளிலும், வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலும் இவர்கள் கோயிலோடு இணைந்து ஆற்றும் ஆன்மிகப்பணி அளப்பரியது. செட்டிநாட்டு ஊர்களுள் சீரும் சிறப்புமுடைய ஊர், கண்டனூர். இவ்வூர் நகரத்தார் பெருமக்கள் வாழும் கிழக்கு வட்டகை ஊர். இவ்வூர், நகரத்தார்கள் ஊர் முகப்பிலேயே சிவாலயம் அமைத்து, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர் போல், சிவமணம் மாறாச் சிந்தையராய்ச் சிவனின் புகழ் பரப்பி வருகின்றனர்.

நகரத்தாரின் நல்ல நிருவாகத்தில் இயங்கி வரும் கண்டனூர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் அழகுக்கும், தூய்மைக்கும் பெயர் பெற்றது. கோயிலுள் கூடி அமர்ந்து நகரத்தார் எடுக்கும் முடிவுக்கு நகரத்தார் இனத்தார் அனைவரும் கட்டுப்பட்டு நடப்பர். இக்கோயிலின் தூய்மையைக் கண்டு அரசாங்கம் பரிசு, பட்டயங்கள் போன்றவற்றை வழங்கிச் சிறப்பித்துள்ளது. அச்சான்றிதழ், கோயில் கருவறை நுழை வாயிலருகே தூணில் நின்று, கோயில் பெருமையினைப் பறை சாற்றுகின்றது.

கண்டனூர் அமைவிடம்

காரைக்குடிக் கல்வி நகருக்கு வடகிழக்கில் பத்து கிலோமீட்டர் தொலைவில் உள்ளது, கண்டனூர். காரைக்குடி - புதுவயல் நெடுஞ்சாலையில், கோட்டையூர் வழியாகக் கிழக்கே திரும்பி அளகாபுரியைத் தாண்டினால் கண்டனூர் அமைந் துள்ளதைக் காணலாம். கண்டனூர் - புதுவயல் புகைவண்டி நிலையம் கண்டனூரின் கிழக்கு எல்லையாக மிளிர்கிறது.

கண்டனூர்ப்பதி தோன்றிய விதமும் பெயர்க்காரணமும்

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய நூல் வீரவனப்புராணம். இந்நூலில் கண்டனூர் தோன்றிய விதமும் பெயர்க்காரணமும் உள்ளன. இப்போதைய சாக்கோட்டை அமைந்த பகுதிதான் 'வீரவனம்' எனக் குறிப் பிடப்படுவது, சாக்கோட்டைக்கும் கண்டனூர் உருவாக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

தழும்பேற்ற தலைவன்

சாக்கோட்டையில் எழுந்தருளியுள்ள பெருமான் ''வீரசேகரர்". இவருக்குத் ''திருமுடித்தழும்பர்" என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

இவர் சுயம்புமூர்த்தியாய் வீரவனப்பகுதியில் வீரை என்ற மரத்தடியில் மறைந்திருந்தார். வேடன் ஒருவன் கிழங்குக்காக மரத்தடியில் இரும்புக்கோலால் கிண்டினான். அவ்விரும்புக் கோல் புற்றடியில் இருந்த இலிங்கப்பெருமான் தலையில் இடித்தது. குருதி பீறிட்டது. இரும்புக்கோல் தாக்கிய தழும்பைத் தலையில் ஏற்ற தலைவனாகையால் ''திருமுடித்தழும்பர்" என்ற பெயரை மூர்த்தி பெற்றார்.

சாக்கோட்டையும் கோட்டூரும்

சாக்கோட்டை போலவே தேவகோட்டைக்கு அருகில் அமைந்துள்ள கோட்டூர் என்னும் பழம்பதியிலும் இதே போல் வரலாறு உள்ளது. அங்குள்ள அகத்தீசுவரப் பெருமானும் புற்றில் சுயம்பு மூர்த்தியாய் இருந்தவர். வயலில் பணிபுரிந்தோர் கிழங்குக்காகப் புற்றைக் கிண்ட, உள்ளிருந்த இறைவன் தலையில் காயம் ஏற்பட்டது. அப்படிக் கண்டு எடுக்கப்பட்டுக் கோயிலில் நிறுவப்பட்டவர் அகத்தீசுவரப் பெருமான். எனவே, கோட்டூர் வரலாறும், சாக்கோட்டை வரலாறும் ஒப்பிட்டு நோக்குதற்குரியன.

சோழன் "கண்டன்" வரவு

கண்டன் என்ற சோழவேந்தன் வெண்குட்ட நோயால் பாதிக்கப்பட்டு, வடநாட்டுத் தலப்பயணம் மேற்கொண்டு, ஊர் ஊராய்ச் சென்று, இறைவனைக் குட்ட நோய் நீக்கியருள வேண்டினான். நோய் தீரவில்லை. தென்னாட்டுப்பகுதியில் தலப்பயணம் மேற்கொண்டான். தென்னகத்தில் வீரவனம் என்ற பகுதிக்கு மேற்குப்பகுதியில் உள்ள கானகத்தில் தங்கி இளைப்பாறிக்கொண்டு இருந்தான்.

சோழன் - வீரன் சந்திப்பு

புற்றில் இருந்த வீரசேகரரைக் கண்டான் வேட்டுவ வீரன். வீரசேகரரைக் கண்ட கணத்திலிருந்தே அவர்பால் அன்பு கொண்டான். அவருக்குக் கோயில் அமைக்கத் தாகம் கொண்டான். ஆனால், ஆலயம் அமைக்கப் பொருளின்றித் தவித்தான். இறைவன் ஒரு நாள் அவன் கனவில் வந்து, சோழ மன்னன் "கண்டன்" என்பான் வருவான்; கோயில் திருப்பணி செய்வான் எனக் கூறியருளினார். அதன்படி கானகத்தில் தங்கியிருந்த சோழனை வேட்டுவ வீரன் கண்டான்.

வீரன் வீரசேகரரின் பெருமை விளம்பலும்

வீரசேகரர் கண்டனின் குட்டம் நீக்கியருளலும்

மன்னன் கண்டனிடம் வீரசேகரரின் பெருமைகளை வீரன் எடுத்தியம்பினான். அதனைக் கேட்ட மாத்திரத்தில் சோழனின் செவியில் இருந்த குட்டம் நீங்கியது. அவரைக் காண எழுந்த பொழுது கால் குட்டம் நீங்கிற்று. கை கூப்பி வணங்கியதும் கையில் இருந்த குட்டம் நீங்கியது. வேடனோடு சென்று வீர சேகரரைக் கண்டு வணங்கித் தழுவியதும் மேனி முழுமையும் உள்ள குட்ட நோய் நீங்கிப் பழைய நிறம் பெற்றான். அதனால் அங்குத் தங்கிச் சோழன், கண்டன் கோயில் திருப்பணி செய்தான்.

கண்டனூர் உருவாதல்

"காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலம்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர்"

என்ற பாடுவார் முத்தப்பர் பாடலுக்குச் சான்று பகர்வது போல் விளங்கும் ஊர், கண்டனூர். சோழன் கண்டன் தன் மனைவி யோடு வீரவனத்திற்கு மேற்குப்பகுதியில் அமைந்திருந்த கானச்சோலையில் தங்கி வீரசேகரரைத் துதித்து வரலானான்.

தான் தங்கியிருந்த காட்டினைச் சீர்செய்து நாடாக்கினான். கடிய நிலங்களைச் செம்மை செய்து வீடுகள் அமைத்தான். மக்கள் பலரைக் குடியேற்றினான். குளங்கள் வெட்டி வளம் பெருக்கினான். தன் பெயர் வரலாற்றில் என்றும் நிலைபெறும்படி "கண்டன் ஊர்" என்ற பெயரும் இட்டான். இதனைக் கூறும் வீரவனப் பாடல் வருமாறு,

"அன்னவெம் கானம் முற்ற
அழித்துமா நகர்உண் டாக்கிப்
பன்னரும் குடிகள் ஏற்றிப்
பலவளங் களும்பொ ருத்தித்

தன்னமும் குறையு றாது
தன்பெயர் விளங்கும் ஆற்றால்
கல்நவில் தடம்பு யத்தான்
***கண்டனூர்** எனும்பேர் இட்டான்"*

கண்டனூர் சிவன் கோயில் தோற்றம்

செட்டிநாட்டில் சிவன் கோயில்கள் பல்கிப் பெருக ஆரம்பித்தன. எல்லா ஊர்களிலும் உள்ள நகரத்தார்கள் தங்களுக்கெனத் தங்களூரிலேயே சிவன் கோயில்களைப் பொதுவில் அமைக்க முற்பட்டனர். கி.பி. 1870இல் கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள் முயற்சியால் அரிமழத்தில் நகரச் சிவன் கோயில் உண்டானது. அதைத் தொடர்ந்து பல்வேறு ஊர்களிலும் நகரச் சிவன் கோயில்கள் தோற்றம் பெற்றன.

கண்டனூர் சுந்தரேசுவரரின் சிறப்பு

தஞ்சை மாவட்டம் மன்னார்குடியிலிருந்து தஞ்சாவூர் வரும் வழியில் உள்ளிக்கோட்டை எனும் ஊர் உள்ளது. இங்கிருந்து ஏறத்தாழ நான்கு கல் தொலைவில் உள்ள "மகாதேவபட்டணம்" என்னும் ஊரில் நன்செய் வயலில்தான் கண்டனூர் சுந்தரேசுவரப் பெருமான் தோன்றியருளினார்.

மன்னார்குடியில் தொழில் செய்த கண்டனூர் நகரத்தார் பெருமக்கள் இவரைக் கண்டெடுத்துக் கண்டனூர் கொணர்ந்தனர். சிறிய திருக்கோயில் அமைத்தனர். சிவன் கோவில் அமைக்கும் போது இப்போது இருக்கும் அம்மன் சந்நிதியிலிருந்து ஊருணிப் படித்துறைவரை உள்ள இடம் மு.நா.– மு.சி.– ராம.நா.– நா.நா. பங்காளிகளால் நகரத்தார் பொதுவிற்கு விட்டுக் கொடுக்கப் பட்டது. ஆனந்த ஆண்டு ஐப்பசித் திங்கள் 19ஆம் நாள் 3-11-1854 இலிருந்து இப்பெருமானுக்குக் கண்டனூரில் நாள் வழிபாடு முதலியவற்றைச் செய்து வருகின்றனர்.

நகரத்தார் இலிங்கப் பெருமானைத் தேர்வு செய்யும் மரபு

நகரத்தார் வேறு ஊர்களில் வழிபாட்டில் உள்ள இலிங்கப் பெருமானையோ அல்லது சுயம்புமூர்த்தியையோ தம் கோயில்களில் நிறுவ விரும்பியுள்ளனர். காரைக்குடி நகரச் சிவன் கோயிலில் உள்ள இலிங்க மூர்த்தி "தேவகோட்டைச் சாலை"ப் பகுதியிலிருந்த பழைய சிவன் கோயிலில் இருந்து கொண்டுவரப்பெற்றது. தேவகோட்டை நகரில் உள்ள சுந்தரேசுவரப்பெருமான் "மணிகண்டி" என்ற ஊரில் இருந்து கொண்டுவரப்பெற்றவர். அவற்றைப் போலவே, கண்டனூர்ச் சிவபெருமான் மூர்த்தியும் "மகாதேவப்பட்டணம்" என்ற ஊரி லிருந்து கொண்டுவரப்பெற்றதாகும். இவ்வாறு கண்டெடுக்கப் படும் இலிங்கப்பெருமானிடம் நகரத்தார் பெருமக்கள் ஏதோ சிறப்பினைக் கண்டுள்ளனர். எனவேதான் இவ்வாறான மரபு பல ஊர்களில் பின்பற்றப்பட்டுள்ளது.

கோயில் திருப்பணி முழுமையடைதலும் முதல் திருக்குடமுழுக்கு நிகழ்த்தப்பெறுதலும்

கி.பி. 1854ஆம் ஆண்டிலிருந்து கண்டனூர் இறைவனுக்கு நாள் வழிபாடு, சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. இருப்பினும் 1892இல்தான் கோயிலைக் கட்டி முடித்தனர். கிட்டத்தட்ட முப்பத்தெட்டு ஆண்டுகள் கோயில் திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. அக்காலகட்டத்தில் பல்வேறு வளர்ச்சி நிலைகளைப் படிப்படியாகக் கோயிலானது பெற்று வளர்ந்து முழுமையடைந்தது. சிவன் கோவில் வெளிப்பிரகார அலங்கார மண்டபம், கண்டனூர் நகரத்தார் பிரதிநிதிகளான திரு.மு.நா.அ. நாச்சியப்ப செட்டியார், கு.மு.உ.ராம. லெட்சுமணன் செட்டியார், வயி.ராம.நா. ராம. ராமநாதன் செட்டியார், நா.லெ. சிதம்பரம் செட்டியார் ஆகியோர் மேற்பார்வையில் செய்து முடிக்கப் பெற்றது. பின்னர், கர ஆண்டு தைத்திங்கள் 26ஆம் நாள்

(7-2-1892) முதலாம் திருக்குடமுழுக்கு விழா நடைபெற்றது. 1978லும், 1992லும் குடமுழுக்குகள் நடைபெற்றிருப்பதை அப்போது வெளியிடப்பெற்ற குடமுழுக்கு மலர்கள் உறுதிசெய்கின்றன. 25-10-1914இல் அறுபதாம் ஆண்டு நிறைவு அபிடேக விழா நடைபெற்றது. கோயில் திருப்பணிக்கு 1-2-1952இல் அறுபதாம் ஆண்டு நிறைவு நிகழ்த்தப் பெற்றுள்ளது. இவ்வாறாகப் பல்வேறு வளர்ச்சி நிலைகளைப் பெற்று இக்கோயில் நகரத்தாரின் செம்மையான நிருவாகத்தினால் சிறப்புற இயங்கிக்கொண்டிருக்கிறது.

இதுவரை நடைபெற்றுள்ள திருக்குடநன்னீராட்டுகள் விவரம்

திருக்குட நன்னீராட்டுகள்	ஆண்டு	மாதம்/ நாள்	ஆங்கில ஆண்டு
முதலாவது	கர	தை 26	7-2-1892
இரண்டாவது	ஆனந்த	ஐப்பசி 16	1914
மூன்றாவது	பிரஜோத்பதி	வைகாசி	1931
நான்காவது	பிரமாதி	வைகாசி	1940
ஐந்தாவது	கர	தை 23	5-2-1952
ஆறாவது	காளயுக்தி	ஆனி 9	23-6-1978
ஏழாவது	பிரஜோத்பதி	தை 25	9-2-1992

நாள் வழிபாடும் சிறப்பு வழிபாடும்

இலக்கியம் இயம்பும் இறைவனின் சிறப்புகள்

"ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க" என்பது திருவாசகம். இறைவன் ஆகமம் ஆகி நின்றவன், ஆகமத்தை அருளியவன். அத்தகையோனுக்குக் கண்டனூரில் காமிக ஆகம முறைப்படி வழிபாடுகள் நிகழ்த்தப்பெறுகின்றன.

"ஞாலம் நாறும் நலம்கெழு நல்இசை
நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்"

(அக.181.15-16)

என அகநானூற்றின் 181ஆவது பாடல் இயம்புகிறது. வேதம் என்னும் முதுநூல் அருளிய முக்கண்ணன் மிக முதியோனாகிறான்.

புறநானூறு 166ஆவது பாடல் அவனை "முதுமுதல்வன்" என்றே சுட்டுகிறது.

"அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த
பெருந்தண் சண்பகம் போல"

(கலி 150:20-21)

என்று சிவபிரானின் வண்ணத்தைச் சொல்லும் போது சண்பகமலர் போல் பொன்வண்ணமானவன் என்று கலித்தொகை 150ஆவது பாடல் கூறுகிறது.

இவ்வாறு அளவிட முடியாத சிறப்புகளுடையவனும் எல்லாக் காலத்தும் எல்லாமுமாக விளங்குபவனுமாகிய சிவபிரானுக்குக் கண்டனூர் நகரத்தார் நாள் வழிபாடுகளையும், பல்வேறு சிறப்பு வழிபாடுகளையும் நிகழ்த்திப் போற்றுகின்றனர்.

நலந்தரும் நாள் வழிபாட்டு நிகழ்ச்சிகள்

கண்டனூர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நாள்தோறும் ஐந்து காலப் பூசைகள் நிகழ்கின்றன. அவையாவன :

ஐந்து காலப் பூசை நிகழ்ச்சிகளின் அட்டவணை

வரிசை எண்	பூசை	நேரம்	நைவேத்தியம்
1.	திருவனந்தல்	காலை 6.00 இலிருந்து 6,30 க்குள்	தோசை, சர்க்கரை
2.	காலசந்தி	8.30 இலிருந்து 9.30 க்குள்	சுத்தான்னம் (வெண்சோறு)
3.	உச்சிக்காலம்	11.30 மணி	புளியோதரை
4.	சாயரட்சை	4.30 மணி சுண்டல்	சுத்தான்னம்
5.	அர்த்தசாமம்	7.30 மணி	சுத்தான்னம், சுண்டல், பால் மற்றும் வெள்ளிதோறும் சிறப்பாக மதுவர்க்கமும் அப்பமும் வழங்கப்படும்.

இத்திட்டப்படி இச்சிவன் கோயிலில் ஐந்து காலப் பூசைகள் சிறப்புற நிகழ்கின்றன.

திருவனந்தல்

திருவனந்தல் என்பது காலைப்பூசை; திருக்கோயிலில் நாளின் தொடக்கத்தில் காலை 6.00 முதல் 6-30க்குள் நிகழும் பூசை, முதலில் பைரவரிடம் சாவி பெற்று விநாயகருக்கு முதல் பூசை நிகழும். பின், சுவாமி அம்பாளுக்குத் தீபாராதனைகள் நிகழ்த்தப்பெறும். பின், இறைவன் இறைவியைப் பள்ளியறை சென்று துயில் எழுப்புவர். பின்னர், சிவபெருமானின் உற்சவ மூர்த்தியைச் சிவிகையில் எழுந்தருளச்செய்து திருக்கோயில் கருவறைக்குக் கொண்டுசெல்வர். இக்காலத்தில் சுவாமிகளுக்குத் தோசையும், சர்க்கரையும் நிவேதனம் செய்யப்பெறும்.

காலசந்தி

ஒரு நாளின் ஆறு பாகங்களுள் இரண்டிரண்டு பாகங்கள் கூடுஞ்சந்திக் காலங்களில் கோயில்களில் செய்யும் பூசை சந்திப் பூசையாகும். இது காலை வேளையில் நிகழ்த்தப்பெறுவதால் காலசந்தியாயிற்று. இப்பூசை நிகழும் காலம் காலை 8.30 மணியிலிருந்து 9.30 மணிக்குள் ஆகும். இப்பூசையில் முதலில் வணங்கப்பெறும் வழிபாட்டுக்குரியவராக சூரியபகவான் திகழ்கிறார். பின்னர், விநாயகருக்கும் அதன் பின் துவாரபாலகர் களுக்கும் வழிபாடுகள் நிகழ்த்தப்பெறும். பின்னர், சுவாமி, அம்பாள் ஆகியோருக்கும் அபிடேக ஆராதனைகளும் அதனை யடுத்து நடராசர் உள்ளிட்ட சுற்றுத் தெய்வங்கள் அனைத்திற்கும் அபிடேக ஆராதனைகளும் நிகழும். இறுதியில், வெளிப்பிள்ளை யாருக்கும், தண்டபாணிக்கும் வழிபாடுகளை நடத்தி, காலசந்தி பூசையை நிறைவுக்குக் கொணர்வர். இப்பூசைவேளையில் சுவாமிக்கு "சுத்தான்னம்" நைவேத்தியம் செய்யப்படும்.

உச்சிக்காலம்

திருக்கோயிலில் நிகழும் மத்தியானப் பூசையே உச்சிக் காலம் எனப்படும். உச்சிக்காலப் பூசையை உச்சிச்சந்தி என்றும் கூறலாம். இப்பூசை நிகழும் நேரம் மதியம் 11-30 மணியாகும். இவ்வேளையில் முதலில் சுவாமி அம்பாளுக்குச் சிறப்பு

அபிடேகமும், ஆராதனைகளும் நிகழ்த்தப்பெறும். பின்னர், நடராசர், சோமாசுகந்தர் ஆகியோருக்குப் பூசை நடைபெறும். இவ்வேளையில் புளியோதரை நிவேதனம் செய்யப்பெறும். சண்டேசுவரருக்குப் பூசை நிகழ்த்தியபின் உச்சிக் கால பூசை நிறைவுற்று நடை சாத்தப்படும்.

4. சாயரட்சை

கோயிலில் நடக்கும் மாலைப்பூசை சாயரட்சை ஆகும். சாயரட்சை பூசையை சைவ சமய நெறி என்னும் நூல் ''சாயான்னம்" என்ற சொல்லால் குறிக்கும்.

"பின்னைத் திருந்தவே சாயான்னஞ் செய்"

எனச் சைவ சமய நெறி கூறுகிறது. இப்பூசை வேளையில் முதல் வழிபாட்டிற்குரிய தெய்வம், துவாரகணபதியாகும். ஆனால், வெள்ளிக்கிழமை மட்டும் அம்பாளுக்குத் தீபாராதனை நிகழும். எனவே, அம்பாள் முதல் வழிபாட்டுக்குரியவள் ஆகிறாள். இவ்வெள்ளிக்கிழமை ''சுக்கிரவாரம்" என்று மக்களால் அழைக்கப்பட்டு வழக்கில் உள்ளது. பின்னர், சுவாமி நடராசர், அம்பாள் மற்றும் சுற்றுக்கோயில்கள் அனைத்திற்கும் வழிபாடுகள் நிகழ்த்தப்பெறும். வெளிப்பிள்ளையார், தண்டபாணிக்கும் வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்று சாயரட்சை பூசையை நிறைவு செய்வர். இப்பூசை மாலை 4-30 மணியளவில் நிகழும். இப்பூசையின்போது சுத்தான்னமும், சுண்டலும் நிவேதிக்கப் பெறுகின்றன.

அர்த்தசாமம்

கோயிலின் நடுநிசிப்பூசை அர்த்தசாமப்பூசை எனப்படும். நடுநிசிப்பூசை என்னும் இப்பூசை எல்லாக் கோயில்களிலும் இரவு.7-30 மணிக்கு மேல் தொடங்கி 8-00 மணி அளவில் முடிக்கப்பெறுகிறது. இப்பூசையின்போது சுவாமி அம்பாளுக்குச் சிறப்பாகப் பாலாபிடேகம் செய்து ஆராதனை செய்வர். பின்னர் பள்ளியறைச் சொக்கரை சுவாமி சந்நிதியில் இருந்து பல்லக்கில்

எடுத்து, அவருக்குப் பாதபூசை நிகழ்த்திப் பள்ளியறையில் இறைவியருகே எழுந்தருளச்செய்வர். அர்த்தசாமப் பூசையில் சுத்தான்னம், சுண்டல், பால் போன்றவை நிவேதிக்கப் பெறுகின்றன. வெள்ளிதோறும் சிறப்பாக மதுவர்க்கமும், அப்பமும் படைக்கப்பெறுகின்றன. பின்னர், பைரவருக்குப் பூசை நிகழ்த்தி நடை சாத்தப்படும். கோயில்களில் அர்த்த சாமப் பூசை மிகச் சிறப்புடையதாகும். திருமணமாகாதவர்கள் பதினொரு வெள்ளிக்கிழமைகளில் அர்த்தசாமத்தில் இறைவனுக்கு மாலை வாங்கிச் சாத்தி வழிபட்டுக் காலைத் திருவனந்தலின்போது பெற்றுச் சென்றால் திருமணம் விரைவில் நிகழும்.

"முழவுமுகம் புலரா விழவுடை வியல்நகர்"

மக்கள் பலர் கூடித் தெய்வங்களுக்குச் செய்யும் சிறப்பே விழா ஆகும். இது "விழவு", சாறு போன்ற வார்த்தைகளாலும் குறிக்கப்பெறும். கண்டனூர், விழாக்கள் நிறைந்த ஊர். அங்குள்ள கோயிலில் ஆண்டு முழுமையும் ஏதேனும் விழா நிகழ்ந்து கொண்டே இருக்கும். முழவின் ஒலி ஓய்தலில்லாத விழாவினையுடைய கோயிலாய்க் கண்டனூர் நகரச் சிவன் கோயில் திகழ்கிறது. எனவே, சங்க இலக்கியங்கள் சுட்டுவது போல் இவ்வூரைச் "சாறுகொள் ஊராய்", "விழவு மேம்பட்ட பழவிறல் மூதூராய்" "விழவு அறுபு அறியா முழவுஇமிழ் மூதூராய்க்" கொள்ளலாம். இனி, மாதவாரியாய் அங்கு நிகழும் விழாக்களைக் காணலாம்.

சித்திரை ஆண்டுப்பிறப்புச் சிறப்பு வழிபாடு

சித்திரை மாதம், தமிழ் ஆண்டுப் பிறப்பு, அன்றைய தினம் கண்டனூர்ப் பஞ்சாங்கக்காரர் அவ்வாண்டு வெளிவந்த பஞ்சாங்கத்தைக் கோயிலில் வாசிப்பார், அன்றைய சிறப்பு வழிபாடுகளுக்கான உபயம் ஒரு குடும்பத்தாரால் செய்யப் படுகிறது. சித்திரா பௌர்ணமி விழா இம்மாதத்தில் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. அன்று இரவு சுவாமி புறப்பாடு ஒரு குடும்பத்தாரால் நடத்தப்பெறுகிறது.

வைகாசி விசாகத் திருநாள்

வைகாசி விசாகத்தன்று காலை சந்திரசேகரர் அம்பாள் ஆகியோருக்குச் சிறப்பு அபிடேகம் நிகழும். மாலையில் சுவாமி அம்பாள் புறப்பாடு நிகழும்.

ஆனிப்பிரம்மோத்சவம்

கண்டனூரில் ஆனிப்பிரம்மோத்சவ விழா மிகவும் சிறப் புடையது. கொடியேற்றிக் காப்புக் கட்டிப் பத்து நாள் விழாவாக இது சிறப்புறக் கொண்டாடப்படுகிறது. யாக சாலை அமைக்கப் பட்டு யாக சாலையிலுள்ள தீர்த்தம் பத்தாம் நாளன்று உச்சிக் காலத்தில் சுவாமிக்கு அபிடேகிக்கப்படும். கொடியேற்றம் சுவாமி சந்நிதிக்கு முன்னுள்ள கொடிமரத்தில் நிகழும். முதல் நாள் கொடியேற்றிக் காப்புக் கட்டியவுடன் காலையில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு கோயிலுக்குள்ளேயே இரண்டாவது திருச்சுற்றில் நிகழும். மாலைப் புறப்பாடு கிடையாது. ஐந்தாம், ஆறாம், ஏழாம் திருநாள்களில் சுவாமி புறப்பாடு வீதியுலாவாகக் கோயிலுக்கு வெளியே நிகழும். சுவாதி நட்சத்திரத்திற்கு முந்தைய நாளாகிய ஒன்பதாம் நாள் தேரோட்டம் நிகழும். தேரோட்டத்தின் போது முதல் தேரில் ஆலமர்ச்செல்வனின் அன்பு மைந்தர்களான விநாயகரும், சுப்பிரமணியரும் உலா வருவர். இரண்டாவது தேர் பெரிய தேர். இதில் சுவாமி வலம் வருவார். மூன்றாவது தேரில் அம்பாளும், நான்காவது தேரில் சண்டேசுவரரும் வலம் வருவர். பத்தாம் நாள் சுவாதி அன்று தீர்த்தவாரி நிகழும். இதற்குச் "சுவாதித் தீர்த்தம்" என்றே பெயர். மாலை சுவாமி அம்பாளுக்கு மஞ்சன நீராட்டு நடைபெற்று வீதியுலா நிகழும். பதினோராம் நாள் ஏகாந்த சேவை ஊஞ்சல் உத்சவம் நிகழும். சுவாமி அம்பாள் ஆகியோரை அலங்கார மண்டபத்தில் ஊஞ்சலில் வைத்து இளைப்பாற்றுவர். பின், உத்சவசாந்தி நிகழும்.

கோயில் பிரிவுகள், கரைகள், வகைகள் மற்றும் புள்ளிகள் பற்றிய அட்டவணை விவரம்

வரிசை எண்	கோயில்	கரை	புள்ளி	வகை	புள்ளி	மொத்தப் புள்ளி
1.	மாத்தூர்	மு.வீர.கரை	38 1/2	சி,.கு.வகை	38 1/2	
		கு.மு.கரை	52			
		தீ.க.கரை	48 1/2			
		சி.வி.கரை	35			
		பெ.அழ.கரை	46			258 1/2
2.	வயிரவன்பட்டி	அ.நா.கரை	91	தெ.ராம.வகை	....	
		வயி.ராம.கரை	67			158
3.	பிள்ளையார்பட்டி	மு.நா.கரை		மு.நா.வகை	17	
		நா.நா.வகை	38			
		ராம.நா.வகை	24			
		சி.வெ.கரை	13	ராம.ப.வகை	11	103
4.	சூரக்குடி	நா.பெ.கரை	70 1/2			70 1/2
5.	இலுப்பக்குடி	க.ராம.கரை	46 1/2			
		சா.வீர.பழ.கரை	21 1/2			68
6.	இரணிக்கோயில்	கு.ப.சு.கரை	53 1/2			53 1/2
7.	இளையாற்றங்குடி	மெ.சு.கரை	40			40
8.	நேமங்கோயில்	தெ.அரு.வகை			16	16
		மொத்தப் புள்ளிகள்				767 1/2

ஆடிப்பூரம்

ஆடி மாதம் கொடியேற்றி, காப்புக் கட்டி ஆடிப்பூர உத்சவம் பத்துநாள் திருவிழாவாய் மிகச்சிறப்புடன் கண்டனூரில் கொண்டாடப்பெறுகிறது. செட்டிநாட்டில் கோவிலூர் ஆடிப்பூரம் மிகவும் சிறப்புடைத்து. அது போல, இங்கும் கொண்டாடப் பெறுகிறது.

ஆடிப்பூர உத்சவம் முழுமையும் அம்பாளுக்குச் செய்யும் சிறப்பு ஆகும். முதல் நாள் கொடியேற்றம் அம்பாள் சந்நிதி முன்னுள்ள கொடிமரத்தில் நிகழும். பின்னர்க் காப்புக் கட்டல் நிகழும். காலையில் அம்பாளை அலங்கார மண்டபத்தில் வைத்து அலங்காரம் செய்வர். பின், தீபாராதனைகள் நிகழும். அலங்கார மண்டபத்தில் எழுந்தருளும் அம்பாள் தொண்டர்குழாத்திற்கு அருள் பாலிப்பாள். தினமும் காலை நிகழ்ச்சி இவ்வாறே நடக்கும். முதல் நாள் மாலை, காளை வாகனத்தில் அம்பாள் புறப்பாடு நிகழும். தினமும் மாலையில் வெவ்வேறு வாகனங்களில் அம்பாள் அமர்ந்து அருள் பாலிப்பாள். ஒன்பதாம் திருநாள் அன்று தேர். இது பூர நட்சத்திரத்திற்கு முன் தினம் ஆகும். தேரன்று அம்பாளும் விநாயகரும் ஒரே தேரில் உலா வருவர். பத்தாம் நாள் பூர நட்சத்திரத்தன்று தீர்த்தவாரி நிகழும். மாலை தபசுக்காட்சி; சோமாசுகந்தரும் அம்பாளும் காட்சி தருவர். பதினோராம் நாள் இரவு திருக்கல்யாணம் நிகழும். பின்னர், பஞ்சமூர்த்திகள் புறப்பாடு நிகழும்.

ஆடித் திருவிளக்குப் பூசை

ஆடி மாதம் இரு திருவிளக்குப் பூசைகள் நிகழும். அப்போது நூற்றெட்டு விளக்குகளை வைத்துப் பூசை செய்வர்.

இருவிளக்குப் பூசைகளுள் முதலில் நடக்கும் விளக்குப் பூசையில் யார் வேண்டுமானாலும் கலந்துகொள்ளலாம். இதற்குக் கோயிலில் முன்பதிவு செய்ய வேண்டும். முதலில் வரும் 108 நபர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். விளக்குப் பூசைக்கு வருவோர்க்குக் கோயிலிலேயே விளக்கு, எண்ணெய், திரி, சர்க்கரைப் பொங்கல், தேங்காய், பழம் போன்றவை வழங்கப் பெறும். இரண்டாவது திருவிளக்குப் பூசையில் நகரத்தார் மட்டுமே கலந்துகொள்வர்.

ஆவணி - சதுர்த்தி

ஆவணி மாதம் விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்பெறுகிறது. காலையில் விநாயகருக்குச் சிறப்பு வழிபாடுகள், அபிடேக ஆராதனைகள் நிகழும். மோதகம், புளியோதரை, சர்க்கரைப் பொங்கல், வடை போன்றவை விநாயகருக்கு நிவேதனம் செய்யப்பெறும். மாலை விநாயகரின் உத்சவமூர்த்தி அலங்கரிக்கப்பெற்றுக் கோயிலுக்கு வெளியே வலம் வரும்.

நவராத்திரி

புரட்டாசி மாதத்தில் நவராத்திரி ஒன்பது நாள் விழாவாய்க் காப்புக் கட்டிக் கொண்டாடப்பெறும். ஒவ்வொரு நாளும் மாலையில் அம்பாளை அலங்காரம் செய்து தீபாராதனைகள் நிகழ்த்தி வழிபாடு செய்வார்கள். ஒன்பதாம் நாள் இரவு சரசுவதி பூசை நிகழும். சரசுவதி பூசைக்கு மறுதினம் விசயதசமி. அன்று ஊரில் உள்ள பல தெய்வங்களும் ஓரிடத்தில் ஒன்றுகூடி அம்பு போடும். கண்டனூரில் நகரச் சிவன் கோயில் சுவாமி சந்திரசேகரரும், பெருமாள் கோயில் சுவாமியும், செல்லாயி அம்மனும் வந்து அம்பு போடுவர்.

அம்பு போட வருகின்ற கடவுளர் விவரம்

வரிசை என்	ஊர்	கோயில்	அம்பு போட வரும் சுவாமி	வாகனம்
1.	கண்டனூர்	நகரச் சிவன்கோயில்	சந்திரசேகரர்	வெள்ளிக்குதிரை
2.	கண்டனூர்	பெருமாள் கோயில்	பெருமாள்	வெள்ளிக்குதிரை
3.	கண்டனூர்	செல்லாயி அம்மன் கோயில்	அம்பாள்	வெள்ளிக்குதிரை

ஐப்பசி

ஐப்பசி மாதம் தீபாவளியன்று காலை சுவாமிகள் அனைத்திற்கும் எண்ணெய் அபிடேகம் செய்யப்பெற்றுப் புத்தாடைகள் அணிவிக்கப்பெறும். வடை, சுண்டல், எலுமிச்சம்பழச்சாதம் போன்றவை நிவேதனம் செய்யப்பெறும்.

கந்த சஷ்டி

ஐப்பசியில் நடக்கும் சிறப்புத் திருவிழா கந்த சஷ்டி உத்சவம். இது பத்து நாள் விழா. முதல் நாள் மாலை காப்புக்கட்டு. வள்ளி தெய்வானை உடனாய சுப்பிரமணியர், வீரபாகு ஆகியோர் தினமும் அலங்கரிக்கப்பெறுவர். சஷ்டி அன்று மட்டும் வெளியில் இறைவன் திருவுலா வருவார். அன்று சூரசம்காரம் நிகழும்.

மயிலம் பூசை

சூரசம்காரத்திற்கு மறுநாள் மயிலம் பூசை. இந்நாளில் காலை வேளையில் வ்ள்ளி தெய்வானை உடனாய சுப்பிரமணியர் மயில் வாகனத்தில் திருவுலா வருவார். அன்று சுப்பிரமணியருக்குச் சண்முகார்ச்சனை நிகழும். அன்றைய தினம் சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, தயிர்ச்சாதம், வடை, சுண்டல் போன்றவை சுவாமிக்கு நிவேதிக்கப்பெறுகின்றன.

தெய்வானை திருக்கலியாணம்

மயிலம் பூசைக்கு மறு நாள் தெய்வானை திருக்கலியாணம் நிகழும். முருகன் வழிபாடு, வள்ளி தெய்வானை திருமணம் போன்றவை சங்க காலம் தொட்டுத் தமிழரின் வழக்கில் இருக்கின்றன. இந்திரன் மகளான தேவயானையை முருகன் மணந்த நிகழ்ச்சியே தேவயானை திருக்கலியாண நிகழ்ச்சி யாகும். திருமுருகாற்றுப்படையில் "குற்றமற்ற அறக்கற்பினை யுடைய தேவயானையாருடன் சில நாள் திருவாவினன்குடி என்னும் ஊரிலே இருத்தலும் உரியன்" என்ற செய்தி உள்ளது.

"தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன் அதாஅன்று"

(முருகு - 175)

வள்ளி திருக்கலியாணம்

மறுநாள் இரவு, வள்ளி தினைப்புனம் காக்கும் நிகழ்ச்சி நடைபெறும். அதன் மறுதினம் வள்ளி திருமணம் நிகழும். திருத்தணிக் குறப்பெண் வள்ளியை முருகப்பெருமான் களவு மணம் புரிந்த நிகழ்ச்சியை நினைவூட்டும் வகையிலேயே இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. முருகனுடன் வள்ளி களவில் கூடி உடன்சென்ற நிகழ்ச்சியை,

"முருகு புணர்ந்து இயன்ற வள்ளிபோல"

(நற். 82 : 4)

என உவமையாக நற்றிணை கூறுகிறது. வள்ளி திருமணம் முடிந்த மறுநாள் விடையாற்றி உத்சவம் நிகழும்.

கார்த்திகைச் சோமவாரம்

கார்த்திகை மாதம் திங்கள் கிழமை தோறும் சாயரட்சையில் நூற்றெட்டுச் சங்குகளில் அபிடேகம் நிகழும். வாசனைப்பொடி கலந்த தீர்த்தம் அபிடேகப் பொருளாகும். இவ்விழா 'சோம வாரம்' என்றழைக்கப்பெறுகிறது. சில ஆண்டு கார்த்திகை ஐந்து கிழமைகளிலும் வரும்; நான்கு திங்கள் கிழமைகளிலும் வரும்; அதைப் பொறுத்துச் சோமவாரம், கார்த்திகை மாதத்தில் ஐந்து முறையோ, நான்கு முறையோ நிகழும். அன்றைய தினம் சந்திரசேகரர் அம்பாள் புறப்பாடு கோயிலுக்குள்ளேயே நிகழும். கடைசிச் சோமாவார இரவு சந்திரசேகரர், விநாயகர், சுப்பிரமணியர் வீதியுலா நடைபெறும். ஒரு காலத்தில் வைரச் சோமவாரம் நிகழ்ந்திருக்கிறது. ஊர் நகரத்தார் தங்கள் வைர நகைகளை சுவாமி அம்பாளுக்கு அணிவித்துப் புறப்பாடு முடிந்தபின் தத்தமது நகைகளை எடுத்துச் செல்வர். ஆனால், சில ஆண்டுகளுக்கு முன் வைரச் சோமவார நிகழ்ச்சி நிறுத்தப்பட்டுவிட்டது. ஏனெனில், இரண்டாம் உலக யுத்தத்தின் போது விளக்குகள் போடத் தடையிருந்தது. அதனால், அப்போதிருந்தே பாதுகாப்புக் கருதி இவ்வழக்கம் கைவிடப் பட்டது. கார்த்திகை மூன்றாவது சோம வாரத்தன்று உச்சிக் காலத்தில் அறுபத்து மூவருக்குச் சிறப்பு அபிடேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெறுகின்றன. இப்போது 1998, 1999 ஆகிய இருவருடங்களாக அனைத்துச் சுவாமிகளுக்கும் சந்தனக் காப்பு அணிவிக்கப்பெற்றுச் சந்தனச் சோம வாரமாக நடத்தப்பெறுகிறது.

திருக்கார்த்திகை

கார்த்திகைத் திருவிழா தமிழனின் பழம்பெரும் திருவிழாக்களுள் ஒன்று. இது எல்லா ஊர்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகிறது. மதி நிறைந்து அறு மீனாகிய கார்த்திகையுடன் சேரும் கார்த்திகைத் திங்கள் நிறைமதி நாளில் எடுக்கப்பெறுவது இவ்விழா. இக்காலத்தில் உழுதொழில் முடிந்து மழையும் பெய்தலை ஒழிந்து நீங்குகிறது. தெருக்களில் விளக்குகளை வரிசையாக வைத்து, மாலைகளைத் தொங்க விட்டு, ஊரில் உள்ளார் பலரும் ஒருங்கு கூடி இவ்விழாவினைக் கொண்டாடுவர்.

இந்நிகழ்ச்சியை,

"உலகுதொழில் உலந்து நாஞ்சில் துஞ்சி
மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்
மறுகு விளங்குறுத்து மாலை தூக்கி
பழவிறல் மூதூர் பலருடன் துவன்றிய
விழவுஉடன் அயர"

(அகம் 141 - 5-11)

என அகநானூறு கூறுகிறது.

இக்கார்த்திகை அன்று கண்டனூர்க் கோயிலில் காலை வேளையில் சுப்பிரமணியருக்கு அபிடேக ஆராதனைகள் நிகழும். பின்னர், மூலத்தானத்து இறைவனுக்கு அபிடேக ஆராதனைகள் நிகழும். மாலை வள்ளி தெய்வானை உடனாய சுப்பிரமணியர், மயில் வாகனத்தில் கோயிலுக்கு வெளியே வலம் வருவார்.

மார்கழி

மார்கழி மாதம் நாள்தோறும் திருப்பள்ளியெழுச்சி தவறாது சிறப்புற நிகழும். வழக்கமாக உள்ள ஐந்து காலப் பூசையுடன் திருப்பள்ளியெழுச்சியும் சேர்ந்து மார்கழி மாதம் மட்டும் ஆறுகாலப் பூசை நிகழ்கிறது. திருவனந்தலுக்கு முன்னரே திருப்பள்ளியெழுச்சி நிகழும். இப்பூசை அதிகாலை நாலரை மணியளவில் நிகழும். இக்காலத்தில் பருப்புப் பொங்கல் சுவாமிக்கு நிவேதனம் செய்யப்பெறுகிறது.

திருவாதிரைத் திருநாள்

முக்கண் மூர்த்திக்குத் திருவாதிரை நட்சத்திரம். எனவே, அந்நாள் பெருந்திருவிழாவாகத் தமிழரால் பழங்காலந்தொட்டே நடத்தப்பெற்று வருகிறது. அந்தணர் தொடங்கும் ஆதிரை விழாவை,

> *"மாஇருந் திங்கள் மறுநிறை ஆதிரை*
>
> *விரிநூல் அந்தணர் விழவு தொடங்க"*
>
> *(பரி - 11 : 77-78)*

என வரும் பரிபாடல் பாடற்பகுதியில் காணலாம். ஆதிரை விழவு தொடங்க என்று பாடலில் உள்ளதால் இது பன்னாள் கொண்டாடப்பெற்ற பெருந்திருவிழாவென்பது வெள்ளிடை மலை.

இந்நாளில் கோயிலில் திருவாதிரை நட்சத்திரத்திற்கு ஐந்து நாள்கள் முன்னர் மாணிக்கவாசகருக்குக் காப்புக் கட்டு, காலை, மாலை ஆகிய இருவேளைகளில் அபிடேக ஆராதனைகள் தினமும் நிகழும். திருவாதிரை அன்று, நடராசர், சிவகாமி, மாணிக்கவாசகர் ஆகியோருக்கும் காலையில் அபிடேக ஆராதனைகள் நிகழும். சுவாமிகளை நகரத்தார்களே தேர்ச்சகடைக்குக் கொண்டுவந்து வைப்பர். பின் கோயிலுக்கு வெளியே புறப்பாடு நிகழும்.

பிள்ளையார் நோன்பு

பிள்ளையார் நோன்பு வழிபாடு என்பது நகரத்தார் மட்டுமே கொண்டாடும் நிகழ்ச்சியாகும். இவ்வழிபாடு திருக்கோயிலில் ஆண்டுதோறும் சிறப்பாக நடந்து வருகிறது. இந்நிகழ்ச்சி திருக்கார்த்திகையிலிருந்து இருபத்தோராவது நாள் சஷ்டியும் சதயமும் சேரும் நாளில் கொண்டாடப்பெறுகிறது. இருபத்தொரு நாள்கள் விரதம் இருந்து ஒவ்வொரு நாளும் ஓர் இழை எடுத்துப் பிள்ளையார் முன் வைப்பர். இருபத்தோராம் நாள் இரவு, மூத்த நகரத்தார் ஒருவர் இழை எடுத்துக் கொடுக்க இழை விழுங்கும் நிகழ்ச்சி" நடைபெறும். இழை எடுத்து வைப்பது திருக்கோயிலில் மட்டுமல்லாது நகரத்தார் வீடுகளிலும் நடைபெறும். அன்று இரவு விநாயகருக்குச் சிறப்பு அபிடேக ஆராதனைகள் நிகழும். கருப்பட்டிப் பணியாரம், வெள்ளைப் பணியாரம், வடை, திரட்டுப்பால், உப்புமா, மசாலாப்பால் போன்ற சிற்றுண்டிகளைக் கோயிலில் உண்பர். இந்நோன்பின் போது ஆவாரம்பூ, நெல்நாற்று, கூழைப்பூ ஆகிய மூன்றையும் ஆவாரங்குச்சியில் கட்டி, சுவாமிக்கு முன் வைப்பர். மறுநாள் அதனை எடுத்துச் சென்று, வீட்டின் முற்றத்தில் வைத்துவிடுவர். இந்நோன்பு நிகழ்ச்சியில் படைக்கப்பெறும் அனைத்துப் பொருள்களும் தண்டல்காரருக்குக் கொடுக்கப்படும். படையலில் நெல்பொரி, சோளப்பொரி, எள்ளுப்பொரி, கம்புப்பொரி ஆகிய பொரிகள் வைப்பது வழக்கம்.

தைப்பொங்கல்

தை மாதம் முதல் தேதி சங்கராந்திப் பொங்கல் விழா நிகழும். அன்றைய தினம் சுவாமி சந்நிதிக்கு நேரே மூன்று பானைகளில் சர்க்கரைப் பொங்கல் வைக்கப்பெறும். மூன்று பானைகளுள் இரண்டு மண்பானை, ஒன்று வெண்கலப்பானை.

வெண்கலப்பானை நடராசருக்குரியது. இரண்டு மண் பானைகளுள் ஒன்று சுவாமிக்கும் மற்றொன்று அம்பாளுக்கும் உரியது.

மாட்டுப்பொங்கல்

மாட்டுப்பொங்கல் அன்று நந்திக்குச் சிறப்பு அபிடேக ஆராதனைகள் நிகழும். கரும்பு, பனங்கிழங்குகள், எலுமிச்சை போன்றவற்றை மாலையாகக் கட்டி நந்திக்குச் சாத்துவர். மாட்டுப் பொங்கலன்று நந்திக்குச் சாயவேட்டி அணிவிக்கப் பெறும்.

தைத்திருவிளக்கு பூசை

இரண்டு திருவிளக்குப் பூசைகள் இம்மாதத்தில் நிகழும். நகரத்தார் மட்டுமே இவ்விரு விளக்குப் பூசைகளிலும் கலந்து கொள்வர்.

தைப்பூசம்

தைப்பூசத்தன்று சுவாமி அம்பாளுக்குச் சிறப்பு அபிடேக ஆராதனைகள் நிகழும். மாலை சந்திரசேகரரும் அம்பாளும் உள்திருச்சுற்றில் வலம் வருவர்.

மாசி மகாசிவராத்திரி

மாசி மாதம் மகாசிவராத்திரி விழா நடைபெறும். இந்நாளில் இரவு நான்கு காலம் சுவாமி அம்பாளுக்கு அபிடேக ஆராதனைகள் நடைபெறும். மாலை வழக்கமாக நடைபெறும் சாயரட்சை முதல் காலமாகும். நான்காம் காலமே அர்த்த சாமமாகும். எனவே, அர்த்தசாமப் பூசை, அன்று அதிகாலையில் நிகழும். எனவே, நடை சாத்திப் பின்னர் உடனே திறந்து மறுநாள் திருவனந்தலைச் செய்வர்.

மகாசிவராத்திரி
நான்கு காலச் சிறப்பு வழிபாட்டு அட்டவணை

வ.எண்	காலம்	நேரம்	நைவேத்தியம்
1.	முதல் காலம்	5-30 (மாலை)	புளியோதரை, சுத்தான்னம்
2.	இரண்டாம் காலம்	10-00 (இரவு)	புளியோதரை, சுத்தான்னம்
3.	மூன்றாம் காலம்	2-00 (இரவு)	புளியோதரை, சுத்தான்னம்
4.	நான்காம் காலம்	4-00 (அதிகாலை)	சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, வடை

மாசி மகம்

மாசி மகத்தன்று சுவாமி அம்பாளுக்குச் சிறப்பு அபிடேகங்கள் நிகழும். மாலை சந்திரசேகரர் அம்பாள் புறப்பாடு நிகழும்.

பங்குனி உத்திரம்

உத்திர நட்சத்திரத்தன்று நகரத்தார் குன்றக்குடிக்குப் பால்குடம் எடுப்பர். மொத்தம் பத்தொன்பது பால் குடம். இது தவிர ஐந்து பால்குடம் இளைஞர் மன்றத்தினரால் எடுக்கப்பெறுகிறது. இவ்வைந்து பால்குடங்களும் நகரத்தார் ஒருவரால் உபயம் செய்யப்பெறுகிறது. இவ்வைந்து குடங்களிலும் தனித்தனியே பால், சந்தனம், விபூதி, பன்னீர், சர்க்கரை போன்றவை இருக்கும். இந்தப் பால்குடங்கள் கண்டனூரில் இருந்து குன்றக்குடிக்குச் செல்லும். காலை ஐந்தரை மணிக்குப் பால்குடங்கள் சிவன் கோயிலிலிருந்து புறப்படும். முருகனுக்கு வேண்டுதல் செய்தவர்களும் காவடி, பால்குடம் எடுப்பர்.

மாதந்தோறும் நடைபெறும் விழாக்கள்

சிறப்பு விழாக்கள் தவிர மாத விழாக்களும் பெருந்தெய்வக் கோயில்களில் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன. "கிருத்திகை, சதுர்த்தி, சஷ்டி, மாதப் பிறப்பு முதலிய விசேட தினங்கள் மாத மொருமுறை வருவன" எனச் சைவத் திருக்கோயிற் கிரியை நெறி என்ற நூல் குறிப்பிடுகின்றது. அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கு அவரவர் முக்தியடைந்த நட்சத்திரத்தில் ஆண்டு முழுவதும் பரவலாகத் தனிக் குடும்பங்களின் உபயமாகக் குரு பூசை விழா நடைபெறுகிறது.

மாதப்பிறப்புத் தீர்த்தம்

மாதப்பிறப்புதோறும் காலசந்தியில் அஸ்திர தேவர் தீர்த்தம் கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெறும். இது மாதப்பிறப்புத் தீர்த்தம் ஆகும்.

அமாவாசைத் தீர்த்தம்

அமாவாசை அன்று அஸ்திர தேவர் தீர்த்தம் கொடுக்கும் உத்சவம் நிகழும்.

சதுர்த்தி

சதுர்த்தி அன்று விநாயகருக்குச் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும்.

பிரதோசம்

இருவாரங்களுக்கொரு முறை வருவது பிரதோசம் என்னும் வழிபாடு ஆகும். பிரதோச காலத்தில் சுவாமி, நந்திக்குச் சிறப்பு வழிபாடுகள் நிகழும். பிரதோச நாயனார் காளை வாகனத்தில் எழுந்தருள்வார். அன்று பருப்புப் பொங்கல், சுண்டல் போன்றவை நிவேதனம் செய்யப்பெறும்.

உற்சவமூர்த்திகள் - வாகனங்கள்

இறைவன் உலா வர உற்சவமூர்த்திகளும் வாகனங்களும் இன்றியமையாதன. இங்குள்ள உற்சவ மூர்த்திகள் வருமாறு :

பிரதோசநாயனார், சோமாசுகந்தர், அம்பாள், முருகன், வள்ளி, தெய்வானை, வீரபாகு, சந்திரசேகரர், அஸ்திரதேவர், நர்த்தன விநாயகர், திருநாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர், துர்க்கை, நடராசர், சிவகாமி அம்பாள் போன்ற உற்சவ மூர்த்திகள் நகருலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றன. இவை வலம் வர உதவும் வாகனங்கள் :

இருவெள்ளிக்காளை வாகனம், வெள்ளிப்பெருச்சாளி, பிரதோசக் காளை வாகனம், வெள்ளிக் கேடகம், கற்பக விருட்சம் போன்ற வெள்ளி வாகனங்களும், மயில், சிம்மம், குதிரை, கிளி, நந்தி போன்ற மரவாகனங்களும் இக்கோயிலில் உள்ளன. இவை கோயிலுக்கு மிக்க சிறப்பினையும் தருகின்றன.

கோயிலில் உள்ள வழிபாட்டு நம்பிக்கைகள்

கண்டனூர்ச் சிவன் கோயிலில் திருமணம்பற்றி இரு நம்பிக்கைகள் உள்ளன. திருமணமாகாதோர் பதினொரு வெள்ளிக்கிழமைகள் தொடர்ந்து அர்த்தசாமப் பூசையில் பள்ளியறைச் சுவாமிக்கு மாலை சாத்தி வழிபட்டு அதை மீண்டும் காலை திருவனந்தலில் வந்து பெற்றுச்செல்ல விரைவில் திருமணம் நிகழும்.

திருமணம் விரைந்து நிகழ நடைபெறும் மற்றொரு வழிபாடு சம்மேளன அரச்சனை ஆகும். இதன்படி வெள்ளிதோறும் நடராசருக்கு வில்வ அருச்சனையும் சிவகாமி அம்மைக்கு குங்கும அருச்சனையும் தொடர்ந்து பதினொரு வெள்ளிக் கிழமைகள் செய்தால் விரைந்து திருமணம் நடைபெறும்.

இவ்வாறாகப் பல்வேறு வழிபாட்டுச் சிறப்புகளையும் நம்பிக்கைகளையும் உடையதாகக் கண்டனூர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் திகழ்கிறது.

திருக்கோயில் நிருவாக நடைமுறைகள்

நகரத்தாரின் நிருவாக மாட்சிமை

மன்னராட்சி இருந்தபோது திருக்கோயில்களில் நாள் வழிபாட்டு நிகழ்ச்சிகளும் திருவிழாக் கொண்டாட்டங்களும் பொலிவுடன் பல்கியிருந்தன. மன்னராட்சிக்குப் பிறகு அவை பல்வேறு கோயில்களில் நலிவுற்றன. ஆனால், நகரத்தார் நிருவாகத்தில் இயங்கும் கோயில்களில் அன்றிருந்த வளர்ச்சியும் சிறப்பும் நூலிழை அறுபடாது தொடர்ச்சியாய் விளங்குகின்றன. இதற்குக் காரணம், நகரத்தாரின் மாட்சிமைமிக்க நிருவாகத்திறனும் தரும சிந்தையும் பொருள் வசதியும் ஆகும்.

கண்டனூர் நிருவாக மரபு

பொதுவாக, நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் தங்கள் கோயிலுக்குத் தேவையான அனைத்தும் தங்கள் கோயிலில் இருக்க வேண்டும் என்ற எண்ணமுடையவர்கள். கண்டனூர் நகரத்தாரும் அவ்வகையினரே. இந்நகரச் சிவன் கோயிலில் கோயிலுக்குத் தேவையான அனைத்தும் உள்ளன. மேலும், அவர்கள் வேறு எவரிடமும் கோயில் பராமரிப்பு மற்றும் நிருவாகத்திற்காக எதையும் பெறுவதில்லை. உண்டியலும் இல்லை. கொடையுள்ளம் கொண்ட கண்டனூர் நகரத்தார்கள் பலரின் உபயத்தால் வழிபாடுகள், திருவிழாக்கள் போன்றவை சிறப்பாக நிகழ்கின்றன. எனவே, கண்டனூர் நகரத்தார் பெருமக்கள் தங்கள் சொந்தச் செலவில் அனைத்துப் பொறுப்புகளையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளதால், கோயிலை நிருவகிக்கத் தனி அமைப்பு தேவைப்படுகிறது, எனவே "கரை" என்ற பகுப்பினைத் தங்களிடையே ஏற்படுத்தி நிருவகிக்கின்றனர்.

ஆனிப்பிரம்மோத்சவ விழா அட்டவணை

வரிசை நாள்	நாள்	காலை நிகழ்ச்சிகள்	மாலை நிகழ்ச்சிகள்	பிற குறிப்புகள்
1.	முதல் நாள்	கொடியேற்றம், காப்புக்கட்டல், பஞ்சமூர்த்திகள் புறப்பாடு		மாலைப்புறப்பாடு இல்லை. 2,3,4 ஆம் நாள்களில் அலங்காரமண்டபத்தில் தீபாராதனைகள் நிகழும்
2.	ஐந்தாம் நாள்	அம்பாள் தபசு		இரவில் நல்லநேரத்தில் சுவாமி அம்பாள் திருக்கல்யாணம் நடைபெறும்
3.	ஐந்து, ஆறு, ஏழாம் திருநாள்கள்	பஞ்சமூர்த்திகள் புறப்பாடு வெளியில் நிகழும்		
4.	ஒன்பதாம் நாள்	பஞ்சமூர்த்திகள் தேர் உலா		முதல் தேரில் விநாயகரும்,சுப்பிரமணியரும் இரண்டாவதாக வரும் பெரிய தேரில் சுவாமி வலம் வருவார், மூன்றாவது தேரில் அம்பாளும் நான்காவது தேரில் சண்டேசுவரரும் உலா வருவார்
5.	பத்தாம் நாள்	சுவாதித் தீர்த்தம்	மஞ்சள் நீராட்டல் புறப்பாடு	இரவில் சப்தாபரணம் (காப்பு அவிழ்த்து குருக்களுக்கு) மரியாதை செய்து சுவாமி வீட்டில் கொண்டு போய் விடுவர்)
6.	பதினோராம் நாள்	விடையாற்றி உத்சவம் ஏகாந்த சேவை		

"கரை" என்பதன் விளக்கம்

கோயில் பொதுக்காரியங்களில் ஈடுபடுகிற நகரத்தார்கள் தங்களுக்குள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ளும் நடைமுறை எளிமைக்காக ஏற்பட்ட பகுப்பே "கரை" என்ற அமைப்பாகும். ஒன்பது நகரக்கோயில் பிரிவில் வேலங்குடி தவிர ஏனைய எட்டு நகரக்கோயில்களைச் சார்ந்தோர் இவ்வூரில் உள்ளனர். நகரக் கோயில் பிரிவுகளின் அடிப்படையிலேயே கரை என்ற அமைப்பு அல்லது பிரிவு உண்டாக்கப்பெற்றுள்ளது. மொத்தம் பதினான்கு கரைகள் உள்ளன.

கரைகளுக்குப் பெயரிடும் முறை

ஒவ்வொரு கோயில் பிரிவைச் சார்ந்தோரில் சிலருடைய விலாசத்தைக் கரைக்குச் சூட்டுகின்றனர். அவ்வாறு அமைந்துள்ள பெயர்களை ஆராயும்போது, அவர்கள் குறிப்பிடத்தக்க திருப்பணி செய்தவர்களாய் இருப்பர். குறிப்பிடத்தக்க திருப்பணிச் சேவை செய்தவர்களின் விலாசத்தைக் கரைகளுக்குப் பெயராய்ச் சூட்டி அவர்களைப் பெருமைப்படுத்தி இருப்பரோ என ஊகிக்கத் தோன்றுகிறது.

நகரக்கோயில் பிரிவில் ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு கரைதான் இருக்க வேண்டும் என்பது இல்லை. ஒன்றுக்கு மேற்பட்ட கரைகள்கூட ஒரு கோயில் பிரிவில் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, மாத்தூர்க் கோவில் பிரிவில் மு.வீர. கரை, கு.மு.கரை, தீ.க.கரை, சி.வீ.கரை, பெ.அழ. கரை என்று ஐந்து கரைகள் உள்ளன. ஒவ்வொரு கரையிலும் வகை என்ற உட்பிரிவும் உள்ளது. ஒரு கரையில் பல வகைகள்கூட இருக்கலாம். உதாரணமாக, பிள்ளையார்பட்டிக் கோயில் பிரிவைச் சார்ந்த மு.நா. கரையில் மு.நா.வகை, மு.ம.வகை, ராம.நா.வகை, நா.நா.வகை என்று நான்கு வகைகள் உள்ளன.

புள்ளிகள் கணக்கிடும் முறை

திருமணமான ஆண் ஒரு புள்ளியாகக் கணக்கிடப்படுவார். கணவனும் மனைவியும் சேர்ந்தே ஒரு புள்ளி எனக் கணக்கிடப் படுவர். கணவன் இறைவனடி சேர்ந்தால் மனைவி அரைப்புள்ளி யாய்க் கணக்கிடப்படுவார். அவளுக்குத் திருமண வயதில் ஆணோ, பெண்ணோ இருந்தால் ஒரு புள்ளியாகக் கொள்வர்.

கண்டனூர் நகரத்தாரின் பொது நிர்வாகத்துக்குட்பட்டவை

கண்டனூர் நகரச் சிவன் கோயில், செல்லாயி அம்மன் கோயில் ஆகியவை கண்டனூர் நகரத்தாரின் நேரடி நிருவாகத் திற்குட்பட்டவை. இவை தவிர நாள் வழிபாடு, திருவிழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளையும் நிருவாகத்தார் கவனிப்பர்.

நிருவாகத்திற்கு அறங்காவலர்களைத் தேர்வு செய்யும் முறை

சோழர்கள் காலத்தில் ஊராட்சி முறை சிறப்பாக அமையக் குடவோலை முறையில் உறுப்பினர்களைத் தேர்வு செய்தனர். அது போலவே, கண்டனூரில் நிருவாக அறங்காவலர் குழு சீட்டுக்குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுகிறது.

கரைகளைத் தேர்வு செய்தல்

கண்டனூரில் சிவன் கோயில் மற்றும் அதற்குரிய கிராமங்கள் ஆகியவற்றையும் செல்லாயி அம்மன் கோயில் மற்றும் அதற்குரிய நிலங்களையும் பதினான்கு கரையார்கள் சார்பாளிகள் முறையில் நிருவகிக்கின்றனர். இப்பதினான்கு கரைகளும் குறிப்பிட்ட நடைமுறைப் பணிகளுக்கேற்ப ஏழு பிரிவுகளாய்ப் பிரிந்து பணிகளைப் பகிர்ந்துகொள்ளும். பதினான்கு கரையுள் சீட்டுக் குலுக்கலில் தேர்வு பெறும் கரைகள் இரண்டாண்டுகள் நிருவாகத்திலிருக்கும். மீதமுள்ள ஏழு கரைகள் அடுத்த முறை தேர்வு பெறும். குலுக்கலில் முதலில் வந்த மூன்று கரைகள் நகரச் சிவன் கோயிலையும், அடுத்த இரு

கரைகள் செல்லாயி அம்மன் கோயிலையும், அடுத்து வரும் இருகரைகள் கிராமங்களையும் நிருவகிக்கும். ஒரு முறை பணியிலிருந்த கரைகள் இரண்டாண்டு இடைவெளிக்குப் பிறகே குலுக்கலுக்கு வரும்.

நிருவாகத்திற்குரிய நபரைத் தேர்வு செய்தல்

சீட்டுக் குலுக்கலில் தேர்வு செய்யப்பெற்ற ஒவ்வொரு கரையாரும் தங்கள் கரைக்குரிய நிருவாகி யாரென அவர்களுக்குள் ஒருமனமாய் முடிவு செய்வர். அவ்வாறு முடிவு செய்ய முடியவில்லை எனில், கரைக்கூட்டம் கூடிக் குறிப்பிட்ட கரைக்குரிய நபரைக் கலந்து பேசியோ, சீட்டுக் குலுக்கியோ முடிவு செய்வர். இவ்வாறு தேர்வு செய்யப்பெற்றவர்களின் பெயர்களைக் கோயிலில் எழுதி வைப்பர். சிவன் கோயிலுக்கு அமைத்த மூவரில், நடைமுறை எளிமைக்காக எந்தக் கரை சீட்டுக்குலுக்கலில் முதலில் வந்ததோ அக்கரைக்குரிய நபர் நிருவாக அறங்காவலராகப் பணியாற்றுவார்.

தற்சமயமுள்ள கோயில் அறங்காவலர்கள்

நகரச் சிவன் கோயில்

1. சி.ராம.சொ.சுப.சொ.பழனிமலைச் செட்டியார் - (கு.ப.சு.கரையில்)
2. நா அ.ராம.கா.ராம. நாச்சியப்ப செட்டியார் - (அ.நா. கரையில்)
3. நா.பழ.ராம.வயி. இராமநாதன் செட்டியார் - (க.ராம.கரையில்)

செல்லாயி அம்மன் கோயில்

1. அரு. அருணாசலம் செட்டியார் - (வயி. ராம. கரையில்)
2. சுப. குமரப்ப செட்டியார் - (மெ. சு. கரையில்)

கிராம நிலங்கள்

1. நா.பெ.நா.ராம. இராமநாதன் செட்டியார் - (நா.பெ.கரையில்)
2. வீ.ராம.சி.கரு.ராம. அழகப்ப செட்டியார் - (சி.வீ.கரையில்)

இருவகைக் கூட்டங்கள்

திருக்கோயில் தொடர்பான காரியங்கள் குறித்து முடிவெடுக்க நகரத்தார் கூட்டும் கூட்டம் இரு வகைத்து. அவை :

1. புள்ளிக்கூட்டம்
2. கரைக்கூட்டம்

கரைக்கூட்டத்தைச் செயற்குழு கூட்டம் (Committee Meeting) என்றும், புள்ளிக் கூட்டத்தைப் பொதுக்குழுக் கூட்டம் (General Body Meeting) என்றும் கூறலாம். நடப்புக் காரியங்களைக் கவனிக்கக் கரைக்கூட்டமும் நகரத்தார் அனைவருக்குமாகிய பொதுவான நிரந்தரமான முடிவுகளை எடுக்கப் புள்ளிக் கூட்டமும் கூட்டப்பெறும். கரைக்கூட்டத்திலும், புள்ளிக்கூட்டத்திலும் எடுக்கப்பெறும் முடிவுகளும் கூட்ட நடவடிக்கைகளும் அவ்வப்போது ஆவணத்தில் எழுதி வைக்கப்பெறுகின்றன. அந்த ஆவணம் **"அட்டவணை"** எனப்படும்.

இக்கூட்டத்தின் சிறப்புகள்

ஒற்றுமைக்கும் கட்டுப்பாட்டிற்கும் பெயர் பெற்ற ஊர் கண்டனூர். கரைக்கூட்டம், புள்ளிக்கூட்டம் போன்றவற்றில் எடுக்கப்படும் முடிவினை மீனாட்சி சுந்தரேசுவரரின் ஆணையாகவே ஏற்பர். சிவன் கோயிலில் நடக்கும் நகரக் கூட்டங்கள் நாடாளுமன்றத்தைக்காட்டிலும் செம்மையாகவும் வரன்முறையோடும் நடைபெறுகின்றன. ஒழுங்குபடுத்தும் சபா நாயகராகச் சுந்தரேசப் பெருமானையே கொண்டு அவர்கள் நடத்தும் கூட்டங்கள் அரசாங்கமே பின்பற்றத்தக்கனவாகும். நகரக்கூட்டத்தில் ஒருவர் பேசும்போது மற்றவர் குறுக்கிட்டுப் பேசமாட்டார். கூட்டம் நடக்கும்போது ஒவ்வொருவரும் பணிவோடும் அமைதியாகவும் இருந்து கருத்துகளைத் தெரிவிப்பர்.

"நான்" என்ற செருக்கின்றி "நாம்" என்ற உணர்வோடு செயல்படுவர். கூட்டத்தில் கலந்துகொள்ளச் சுற்றறிக்கையில் கையெழுத்திட்டுவிட்டு முன்னறிவிப்பின்றி வராதிருந்தால் சிவாதாயம் (அபராதம்) விதிப்பர். ஏழை - செல்வர் என்ற வேறுபாடுகள் இங்கு இல்லை. எவரும் எவரையும் எடுத்தெறிந்து பேச மாட்டார்கள். அவ்வாறு பேசினால் அது குற்றமாகக் கருதப்பெறும். இவ்வாறு கண்டனூர் நகரத்தார்களின் கூட்டம் பல்வேறு சிறப்புகளைக் கொண்டுள்ளது. தீர்மானங்கள் விவாதங்களுக்குப் பிறகு ஒருமனமாகவே எடுக்கப்பெறும். கருத்து வேறுபாட்டைப் பெரும்பான்மையில் சரிசெய்வதில்லை.

திருக்கோயிலமைப்பு

இக்கோயில் காமிக ஆகம விதியினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பெற்றுள்ளது. கருவறை, அருத்த மண்டபம், மகா மண்டபம், கொடிமரம், பலிபீடம் போன்ற கோயிலுறுப்புகள் முறையாக அமைந்துள்ளன. கருவறையின் மேல்விமானமும், நுழை வாயிலில் இராசகோபுரமும் நேர்த்தியாக உள்ளன. கருவறையில் சுந்தரேசுவரப் பெருமான் இலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். கருவறைத் தேவகோட்டத்தில் நர்த்தன விநாயகர், தட்சிணாமூர்த்தி, அண்ணாமலையார், பிரும்மா, விஷ்ணு, துர்க்கை போன்றோருக்கான திருவுருவங்கள் இடம் பெற்றுள்ளன. கருவறையின் மேல் உள்ள விமானம் சுமார் இருபத்தைந்து அடி உயரமாகும். அருத்த மண்டபத்தில் ஆடல் வல்லானின் சந்நிதி உள்ளது. நடராசரின் உருவம் செப்புத் திருமேனியாக இங்கு உள்ளது. இம்மண்டபத்தில் நந்தி, பலிபீடம், கண்ணாடி, உத்சவமூர்த்திகளின் செப்புத்திருமேனிகள் போன்றவை உள்ளன.

அருத்த மண்டபத்திற்கு அடுத்து மகாமண்டபத்தில் அம்மன் சந்நிதி தெற்கு நோக்கி அமைந்துள்ளது.

இவைதவிர சண்டிகேசுவரர் சந்நிதி, சூரியன் அறுபத்து மூவர் மண்டபம், விநாயகர், காசி விசுவநாதர், விசாலாட்சி, சோமாசுகந்தர், சந்தான கோபாலகிருட்டினன், விநாயகர், வள்ளி தெய்வானை, உபாய சுப்பிரமணியர், சரசுவதி, மகாலெட்சுமி, பைரவர், சூரியன், சந்திரன் போன்ற தெய்வங்களுக்கான சந்நிதிகளும் பள்ளியறை, நவக்கிரகங்களும் காணப்பெறுகின்றன. இவைதவிர மடைப்பள்ளி, கிணறு, வாகனங்கள் வைப்பறை போன்றவையும் கோயிலுக்குள் அமைந்துள்ளன. அலங்கார மண்டபம் அழகும் சிறப்பும் பொலிவும் உடையது. நகரக் கூட்டம் அலங்கார மண்டபத்தில் நடைபெறும்.

கண்டனூரின் பிற சிறப்புகள்

- கல்வி வளர்ச்சியில் கண்டனூர் குறிப்பிடத்தக்க சிறப்புடையது.
- வள்ளல் அமரர் உயர்திரு. வீ.தெ. வீரப்பச் செட்டியார் அவர்கள் தம் தாயாரின் வேண்டுகோளின்படி சிட்டாளாச்சி நினைவு தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளிகளை நிறுவி உயர்பள்ளிக் கல்வி வளர்ச்சிக்கு உதவினார்கள்.
- அழகப்ப வள்ளலின் மகள் திருமதி உமையாள் இராம நாதன் அவர்கள் இவ்வூரைச் சேர்ந்தவர்கள்.
- பட்டம் பெற்றவர்கள், பதவியாளர்கள், வணிக மேதைகள், அயல்நாட்டில் வாழ்பவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை கிராமம் ஒன்றன் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கு அதிகமாக உள்ளது.
- கவிஞர் உயர்திரு. டாக்டர் அர. சிங்கார வடிவேலன் அவர்கள் இவ்வூரைச் சேர்ந்தவர்கள். அவர்கள் முப்பது வருடங்களுக்கு மேலாகத் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரியில் தமிழ்த்துறைத்தலைவராகப் பணியாற்றியவர்கள்.

❖ பாரதத்திற்குத் தமிழகத்தின் சார்பில் கண்டனூர் அளித்த மிகப் பெரும் பரிசு மாண்புமிகு. திரு.ப. சிதம்பரம், அவர்கள் ஆவார்கள். இவர்கள் மத்தியில் வர்த்தகத்துறை இணை அமைச்சராகவும், மத்திய நிதியமைச்சராகவும் பணியாற்றியவர்கள்.

❖ பாரத நாட்டின் செய்தி விளம்பரத்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு சொக்கு சுப்பிரமணியம், குழந்தைக்கவிஞர் செல்லகணபதி போன்ற கவிஞர்களையும் பெற்றுத்தந்த பெருமை கண்டனூருக்கு உண்டு. குழந்தைக்கவிஞர் செல்லகணபதி அவர்கள் வள்ளியப்பா இலக்கிய வட்டம் நிறுவிக் குழந்தை இலக்கியப்பணி ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

❖ கண்டனூரைச் சார்ந்த பிள்ளையார்பட்டிக் கோவில் பிரிவினரான மு.நா.குடும்பத்தாருக்குப் பிள்ளையார்பட்டிக் கற்பக விநாயகர் கோவிலிலிருந்தும் பாதரக் குடியிலிருந்தும் தை மாதம் பொங்கல் பானைச் சீர் வருவதும், இரணியூரிலிருந்து குப.சு. குட்டை அய்யா குடும்பத்திற்குப் பொங்கல் பானை வருவதும் குறிப்பிடத்தக்கவை.

❖ பாகனேரி புல்வநாயகி அம்மன் தேர் உற்சவத்தில் இவ்வூர் சி.வெ.கரையைச் சேர்ந்த அமரர் வெள்ளையன் செட்டியார் பெயரில் தேர்க்காலில் உடைக்கத் தேங்காய் போடும் மரியாதை செய்யப்படுகிறது.

❖ ஸ்ரீபட்டினத்தடிகள் திருவிழாவைப் பல வருடங்களாக மகாதேவா காசிச் செட்டியார் குடும்பத்தார் காவிரிப்பூம்பட்டினத்தில் நடத்தி வருகின்றனர்.

❖ "கோதையாச்சி அருணாசலம் செட்டியார் திருமண மண்டபத்தை மு.நா. - மு.சி. - ராம.நா. - நா.நா. பொதுத்தர்மம் வழங்கிய மனையிடத்தில் தன் செலவில் கட்டி அதன் வருமானத்தைப் மு.நா. - மு.சி. - ராம.நா. - நா.நா. பொது தர்மத்துக்கே வழங்கிய அமரர் நா. அருணாசலம் செட்டியார் அவர்கள் பாராட்டுக் குரியவர்கள்.

❖ கண்டனூரினைச் சேர்ந்த சித.அரு. சிதம்பரம் செட்டியார் சித.பழ. ராமசாமி செட்டியார், அ.சி.நா.சி.சித. சிதம்பரம் செட்டியார் ஆகிய மூன்று பெருமக்களும் முன்பு தோற்றுவித்த மருத்துவமனையும் லெ.சித.லெ.பழ.குடும்பத்தார் நடத்திவரும் காந்திமதி மருத்துவ மனையும் குறிப்பிடத்தக்க மருத்துவசேவை மையங்களாகும். லெ.சித.லெ.பழ. குடும்பத்தில் ப. லெட்சுமணன், ப.சிதம்பரம் ஆகியோர் இணைந்து இலக்கியச் சிந்தனை என்ற அமைப்பின் மூலம் செய்யும் இலக்கியப்பணி குறிப்பிடத்தக்கது.

❖ விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட தியாகிகள் பலர் இங்கு உளர். அன்பு நாவன்னா, தேனப்பச் செட்டியார், தெ.அரு.சித.அரு. குப்பான் செட்டியார், சி.ராம.சொ.சுப. சொக்கலிங்கம் செட்டியார், ஜப்பானிலும், மலேயாவிலும் இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றிய தியாகி திரு.ரெ. மெய்யப்பன் ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். "காதல்" ஆசிரியர் அரு. இராமனாதன் அவர்கள் இவ்வூரைச் சேர்ந்தவர்கள்.

❖ காசி நாட்டுக்கோட்டை நகரத்தார் மேலாண்மைக் கழகத்தின் தலைவராக முன்பிருந்தும் அடுத்தடுத்து வரும் தலைவர்களுக்கு உறுதுணையாக நின்றும் திரு. சுப. சண்முகம் செட்டியார் அவர்கள் செய்யும் பயன் கருதாப் பணி குறிப்பிடத்தக்கது.

❖ "நகரத்தார் கல்வி அற நிலையம்" என்ற படிப்புதவி நிறுவனம் ஒன்று அமரர் திரு.சி.ராம. கருப்பஞ்செட்டியார், அமரர் திரு. நா. அருணாசலம் செட்டியார் ஆகியோரின் முயற்சியால் நிறுவப்பெற்று உயர்நிலைக் கல்விப்படிப்பிற்குத் தகுதி அடிப்படையில் வட்டியின்றித் திருப்பிச் செலுத்தும் பொருளுதவி செய்து வருவது பாராட்டுக்குரியது.

❖ நகரத்தார் இளைஞர் வளர்ச்சிக்கு ஏறத்தாழ 250க்கும் மேற்பட்ட இளஞ்சிங்கங்களை உறுப்பினராகக் கொண்டு ஆற்றி வரும் சமுதாயக் கல்வி, ஆன்மிகச் சேவைகள் அளப்பரியவை.

❖ நானூறு ஆண்டுகளாகப் பழனிப் பயணத்தை வேல் தாங்கி நடத்திச் செல்லும் பழனிக்கோயில் அருளாடியார் பரம்பரை இவ்வூரைச் சார்ந்தது. குட்டை அய்யா தலைமுறையில் ஒன்பதாவது தலைமுறையைச் சார்ந்த இளங்காளை அருளாடியார் திரு. பழ. பழநியப்பன் அவர்கள் தம் மரபின்படி வழி நெடுகிலும், பழனியிலும் நிகழ்த்தி வரும் திருநீற்றின் பெருமை கண்டனூரின் தெய்விகப் பெருமைக்குக் கண்கண்ட சான்று. அவர்கள் குடும்பத்திற்குப் பாதரக்குடி மடத்தில் இருந்து பொங்கல் பானை வருவது குறிப்பிடத்தக்கது. மேலும், மேற்படி குடும்பத்தார் சார்பாக, குட்டை அய்யா சமாதியும், சின்னையா செட்டியார் சமாதியும் அமைக்கப்பெற்று ஆண்டுதோறும் குருபூசை நடந்து வருகிறது.

❖ ஒன்பது நகரக் கோயில்களில் ஏழு நகரக் கோயில் அறங்காவலர் குழுக்களில் இடம் பெறும் பரம்பரை உறுப்பினர்கள் கண்டனூரில் உள்ளனர். பாதரக்குடி நகரத்தார் குருபீட மடத்திற்கு மு.நா.கு.மு. குடும்பத்தார் பரம்பரை தர்மகர்த்தாக்களாக இருந்து வருகிறார்கள்.

❖ கண்டனூரில் நகரச் சிவன் கோயிலின் தற்போதைய நிருவாக அறங்காவலர் உயர்திரு. ஓவியர். சொ. பழனிமலை அவர்கள் சிறந்த ஒட்டோவியர். துணிகளை ஒட்டிச் சேர்த்து அவர்கள் செய்யும் ஒட்டோவியம் கலைநயம் மிக்கதாகும். தஞ்சை ஓவியப்பாணியில் கைதேர்ந்தவராகிய திரு. சிவ. ராம. ஆவுடையப்பன் அவர்களும், கண்டனூர்க்குப் பெருமை தரும் ஓவியர் என்பது குறிப்பிடத்தக்கது. பிள்ளையார்பட்டி கற்பக விநாயகரைப் பல்வேறு வண்ணங்களிலும் கோணங்களிலும்

கணிணி முறையில் படங்களை எடுத்து உலகெங்கும் பரப்பிவரும் அன்பு சிதம்பரம் அவர்களும் கண்டனூர்க்கு அணிகலன்களாய்த் திகழ்கின்றனர்.

❖ நா.நா.குடும்பத்தைச் சேர்ந்த நா. நாராயணன் என்ற வள்ளல் சீனி, சோதிட ஆராய்ச்சியில் வல்லுநர் என்பது குறிப்பிடத்தக்கது.

❖ கொடையுள்ளம் கொண்ட அன்பர்கள் இருபது பேர் கண்ட னூரில் நகரத்தார் இனத்தைச் சேர்ந்த எளிய குடும்பப் பெண்ணின் திருமண உதவியாகத் தலைக்கு ரூபாய். 500 (ஐந்நூறு ரூபாய்) எத்தனை திருமணம் ஆண்டு ஒன்றில் நடந்தாலும் வழங்குவது குறிப்பிடத்தக்கது.

❖ அய்யன் திருவள்ளுவருக்கு அன்றே விழா நடத்திய குறள் விழா மு. தேனப்பன் அவர்கள் கண்டனூரினர் என்பது குறிப்பிடவேண்டிய ஒன்று.

❖ பந்தி விசாரணை, பாராட்டு விழா, வரவேற்புரை, நன்றியுரை, சமய இலக்கியப் பொது நிகழ்ச்சிகள் ஆகிய அனைத்திலும் முன்நின்று நடத்திக் கொடுத்த தமிழ்த்தொண்டர் அமரர் லெ. இராமநாதனுடைய சேவை கண்டனூர் வரலாற்றில் குறிப்பிடத்தக்கது.

கண்டனூர் நகரத்தார் செய்திருக்கும் பிற கோயில் திருப்பணிகள்

வரிசை எண்	திருப்பணி செய்த குடும்பம்	திருப்பணி செய்யப் பெற்ற ஊர்	கோயில் பெயர்
1.	சி.நெ.வீர. குடும்பம்	கண்டனூர்	பெருமாள் கோயில்
2.	மு.நா.— மு.சி. — ராம.நா. நா.நா. வகைகள்	கண்டனூர்	செட்டியார் ஊருணிக் கற்பகவிநாயகர் கோயில்
3.	அன்பர்கள் சேர்ந்து கட்டியது	கண்டனூர்	முருகன் கோயில்
4.	பெ.அழ.வெ.வீர.	திருத்துறைப்பூண்டி	சிவன் கோயில்
5.	பெ.அழ.	திருத்தங்கூர்	சிவன் கோயில்
6.	அ.சி.— தெ.அரு.சித.	கன்னார் கோயில்	சிவன் கோயில்
7.	நா.பெ.வெ.ராம	கண்டனூர்	நெல்லிமரத்துமேலப் பிள்ளையார் கோயில்
8.	வயி.அ.ராம.	கண்டனூர்	ஆரியக்கிழவன் ஊருணி அருகில் உள்ள பிள்ளையார் கோயில்
9.	பெ. அழ.	புதுவயல்	பிள்ளையார் கோயில்
10.	மு.வீர.கரை சி.கு. உள்ளிட்டோர்	வடகுடி	பிள்ளையார் கோயில்
11.	தீ.க. கரையார்	திருக்கண்ணபுரம்	பெருமாள் கோயில்
12.	குப.சு.அரு.	செம்மடப்பட்டு	பிள்ளையார் கோயில்
13.	வயி.வகை.	கல்லாங்குடி	பிள்ளையார் கோயில்
14.	ராம.ப.மு. குடும்பம்	கோவில்பட்டி	மங்கள விநாயகர் கோயில்
15.	அன்பர்கள் சேர்ந்து கட்டியது	கண்டனூர்	குல்லாப்பரதேசியார் மடத்துப் பிள்ளையார் கோயில்
16.	அ.ப.சு.பழ.அழகப்பன்	வேங்காவயல்	பிள்ளையார் கோயில்
17.	நா.பெ.ராம.— தெ.அரு. சித. — ராம.ப.கு	கண்டனூர்	பழையமடம் செல்வ விநாயகர் கோயில்
18.	வயி.ராம.நாரா.சோம குடும்பத்தார்	காஞ்சிபுரம்	கரஹரீஸ்வரர் கோயில் திருப்பணி
19.	வயி.ராம.வகை குடும்பத்தார்	காஞ்சிபுரம்	குமரக்கோட்டம் (முருகன் கோவில்)
20.	நா.அ.ராம. இராமசாமி செட்டியார் குடும்பம்	வயிரவன்பட்டி	வயிரவன் கோயில் திருப்பணி

பாடசாலைகள்

வரிசை எண்	பாடசாலை தர்மம் செய்த குடும்பம்	பாடசாலை அமைக்கப்பெற்ற ஊர்
1.	மு.நா. குடும்பம்	குன்றக்குடி வேதாகம பாடசாலை
2.	அ.சி. குடும்பம்	மாயவரம் வேதாகம பாடசாலை
3.	பெ.அழ.	திருவாரூர் வேதாகம பாடசாலை
4.	வயி.அ.	திருவானைக்காவல் பாடசாலை
5.	வயி.ராம. வகைக் குடும்பம்	காஞ்சிபுரம்
6.	ராம.ப.மு. குடும்பம்	சங்கரநயினார் கோயில்

பிற தர்மங்கள்

வரி. எண்	தர்மம் செய்த குடும்பத்தார்	தர்மம் செய்யப் பெற்ற ஊர்	தர்மங்கள்
1.	கு.மு. குடும்பம்	சாக்கோட்டை	தெ.பெ. சத்திரம்
2.	அ.நா. குடும்பம்	மாயவரம் வகையறா டிரஸ்ட்	அ.நா. அன்னசத்திரம்
3.	சி.ராம.சொ. குடும்பம்	இராமேஸ்வரம்	வடஇந்தியப் பயணி களுக்கு அன்ன சத்திரம்
4.	நா.பெ.ராம.— அ.ப.லெ. குடும்பம்	திருநெல்வேலி	சத்திரம்
5.	மு.நா.— மு.சி.— ராம.நா நா.நா.— வகைப் பங்காளிகள்	கண்டனூர்	செட்டியார் ஊருணியும் கற்பக விநாயகர் கோயிலும் மாப்பிள்ளை அழைக்கும் மடமும், நா.அருணாசலம் செட்டியார்-கோதை ஆச்சி திருமணமண்டபமும்
6.	நா.பெ.வெ.ராம.	கண்டனூர்	நெல்லிமரத்துப் பிள்ளையார் கோயில் ஊருணி
7.	வயி.அ. ராம.	கண்டனூர்	ஆரியக்கிழவன் ஊருணி
8.	பெ.அழ.	புதுவயல்	பிள்ளையார் கோயில் ஊருணி

9.	மு.வீர.கரை சி.கு. உள்ளிட்டார்	வடகுடி	பிள்ளையார் கோயில் ஊருணி
10.	கு.ப.சு. கரை	கண்டனூர்	அருணாசலய்யாமடம்
11.	மெ.ராம — நா.அ.வெ.	கண்டனூர்	துவாதசி மடம்
12.	குப.சு. கரை.	செம்மடப்பட்டு	பிள்ளையார் கோயில் ஊருணி
13.	குப.சு.அரு.	இரணிக்கோயில்	பெருமாள் கோயில் ஊருணி
14.	தெ.அரு.கு.பழ.	கண்டனூர்	பசுமடம்
15.	வயி. ராம.அரு. குடும்பத்தார்	காஞ்சிபுரம்	பசுமடம்
16.	பகு.லெ.— அக.மு.	கண்டனூர்	பிள்ளையார் கோயில் பழைய மடம்
17.	வயி.வகை	கல்லாங்குடி	பிள்ளையார் கோயில் ஊருணி
18.	அழ.வெ. அழகம்மை ஆச்சி	கண்டனூர்	சிவன்கோயில் முன் மண்டபம்
19.	தெ.அரு.சித.அரு.குப.	கண்டனூர்	கண்டனூர், பாலையூர் 1938இல் குடிநீர்க் குழாய்
20.	சி.வெ.நா.சோம. செல்லப்பசெட்டியார், சிராம.சொ.சுப்பிரமணியன் செட்டியார்,	கண்டனூர்	குடி தண்ணீர்த் தொட்டி (இரதக்கொட்டகை வீதி)
21.	தெ.பெ.சத்திரம்	சாக்கோட்டை	உமையாள் கோயில் தீர்த்தவாரி மண்டபம்
22.	வயி.ராம.வெ.ராம.வெ.	கண்டனூர்	செல்லாயி அம்மன் கோயில் நந்தவனம்
23.	கண்டனூர் நகரத்தார்	சாக்கோட்டை	வீரசேகர உமையாம்பிகை திருக்கோயில் 8ஆம் திருநாள் மண்டகப்படி.

இப்படியாக எல்லாச் சிறப்புகளையும் கொண்ட கண்டனூர் மேன்மேலும் சிறப்படைய வாழ்த்தி எல்லாம் வல்ல அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரரின் திருவடிகளை வணங்கி இந்நூலை நிறைவு செய்கிறேன்.

வரைபட விளக்கம்

1. கருவறை
2. அந்தராளம்
3. நடராசர் சந்நிதி
4. நர்த்தனவிநாயகர்
5. தட்சிணாமூர்த்தி
6. அண்ணாமலையார்
7. பிரும்மா
8. விஷ்ணு துர்க்கை
9. சண்டிகேசுவரர்
10. அம்மன் சந்நிதி
10a. நந்தி
10b. பலிபீடம்
10c. கொடிமரம்
11. சுவாமி கொடிமரம்
12. பலிபீடம்
13. நந்தி
14. மகாமண்டபம்
15. முதல் திருச்சுற்று
16. நாயன்மார்கள் மண்டபம்
17. சோமாசுகந்தர்
18. சந்தான கோபால கிருட்டிணன்
19. விநாயகர்
20. சுப்பிரமணியர்
21. சரசுவதி
22. மகாலெட்சுமி
23. வாகன அறைகள்
24. பள்ளியறை
25. பைரவர்
26. அறுபத்துமூன்று நாயன்மார்கள் படக்கோயில்
27. நவக்கிரகம்
28. சந்திரன்
29. சூரியன்
30. இரண்டாம் திருச்சுற்று
31. தெற்குக் கோபுரம்
32. அலங்கார மண்டபம்
33. கிழக்குக் கோபுரம்
34. விநாயகர் சன்னதி
35. முருகன் சன்னதி
36. முகப்பு மண்டபம்

திருக்கோயில் வரைபடம்

